இது ரகசியம் அல்ல!

நேற்று மாலை கொழும்பில் ஜனநாயகத்தின் பெயரில் அதிரடியாக அரங்கேறிய அரசியல் சதி பற்றிய செய்திகளை வாசகர்களுடன் பகிரலாம் என நினைக்கிறேன்.
இந்தத் திட்டத்தைக் கனகச்சிதமாக அதனை அரங்கேற்றி முடிக்கும் வரை பக்கம் 02

பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 09 வெள்ளிக்கிழமை 26.10.2018 கதிர் 354

## உரிய காலம் வரும்போது கூட்டு அணி அமைப்பேன்



### இதுவரை யாருடனும் கூட்டுச் சேரவில்லை என்கிறார் முன்னாள் முதலமைச்சர் விக்கி

யாழ்ப்பாணம், ஒக். 27
எந்தக் கட்சியும் என்னுடன் இதுவரை கூட்டணி அமைக்கவில்லை. உரிய காலம் வரும்போது கூட்டு அணி ஒன்றை உருவாக்கி செயற்படும் நடவடிக்கைகளை எடுப்பேன்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன். பக்கம் 11

## முக்கிய இடங்களில் இராணுவம் குவிப்பு

கொழும்பு, ஒக். 27
கூட்டு அரசு பதவி கவிழ்க்கப்பட்டு, மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டதை அடுத்து, கொழும்பில் முக்கியமான இடங்களில் பக்கம் 11

## சிறுபான்மைக் கட்சிகளுக்கும் அமைச்சரவையில் இடமாம்

கொழும்பு, ஒக். 27
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை உள்ளடக்கிய புதிய அமைச்சரவையில் பங்கேற்குமாறு சிறுபான்மைக் கட்சிகளுக்கு அழைப்பு விடுவிக்கப் பக்கம் 11

# கவிழ்ந்தது நல்லாட்சி! பிரதமரானார் மஹிந்த!!

## ரணிலுக்கு வேட்டு வைத்தார் மைத்திரி மிக இரகசியமாக நடந்த ஆட்சிமாற்றம்




கொழும்பு, ஒக்ரோபர் 27
ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் இணைந்து ஏற்படுத்திக்கொண்ட நல்லாட்சி நேற்றிரவு முடிவுக்கு வந்தது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கூட்டரசிலிருந்து வெளியேறிப் பொது எதிரணியான மஹிந்த அணியுடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் புதிய பிரதமராகப் பதவியேற்றார். பக்கம் 11

## நானேதான் பிரதமர்! ரணிலும் விடாப்பிடி

கொழும்பு, ஒக். 27
அரசமைப்பின் பிரகாரம் நானே பிரதமர் பதவியில் தொடர்ந்து நீடிக்கிறேன். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின்கதவால் வந்து ஜனாதிபதி முன்னிலையில் பிரதமராகப் பதவியேற்றுள்ளார். பக்கம் 11

## ரணிலுக்கு மைத்திரி கடிதம்

கொழும்பு, ஒக். 27
பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்றிரவு ரணிலுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.
இலங்கை அரசமைப்பின் 42 (4) ஆவது பிரிவின் கீழ் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய, தங்களைப் பக்கம் 11



## ரணில் தலைமையில் ஐ.தே.க. ஆலோசனை



கொழும்பு, ஒக். 27
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரின் உத்தியோகபூர்வ பக்கம் 11

## ஜனநாயக விரோத ஆட்சிக் கவிழ்ப்பு

### மங்கள சமரவீர ஆதங்கம்

கொழும்பு, ஒக். 27
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளமை அரசமைப்புக்கு விரோதமானதும் சட்டபூர்வமற்றதும் ஜனநாயக விரோத ஆட்சிக் கவிழ்ப்புமாகும் என்று முன்னாள் நிதி அமைச்சர் பக்கம் 11

## புதிய அமைச்சரவை குறித்து மைத்திரிபால – மஹிந்த பேச்சு

கொழும்பு, ஒக். 27
நடைமுறையிலிருந்த அமைச்சரவையை அதன் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலைத்துள்ள நிலையில் புதிய அமைச்சரவை விரைவில் நியமிக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே பக்கம் 11

## சபாநாயகரின் அறிவிப்பு இன்று

கொழும்பு, ஒக். 27
நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பான சட்ட ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகச் சபாநாயகர் கருஜயசூரிய அறிவித்துள்ளார்.
நாட்டில் பக்கம் 11

## மஹிந்த நியமனம் செல்லுமா? கொழும்பில் அரசியல் குழப்பம்

கொழும்பு, ஒக். 27
மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளதால், அரசியல் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.
மஹிந்தவை பிரதமராக நியமித்திருப்பது செல்லாது பக்கம் 11

## மைத்திரிக்கு ரணில் பதில்

கொழும்பு, ஒக். 27
அரசமைப்பின் பிரகாரம் பிரதமராக நியமிக்கப்பட்ட நான் அந்தப் பதவியில் தொடர்கின்றேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குப் பதில் கடிதம் எழுதியுள்ளார் ரணில் விக்கிரமசிங்க.
அரசமைப்பின் படி நாடாளுமன்றின் நம்பிக் பக்கம் 11

## மஹிந்த பக்கம் தாவும் ஐ.தே.கவின் எம்.பிக்கள்

கொழும்பு, ஒக். 27
ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டு அரசில் பிரதி அமைச்சராகப் பதவி வகித்தவருமான ஆனந்த அளுத்கமகே, புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.
கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகேயின் பக்கம் 11

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதுபற்றிய விடயம் வெளியே கசியவிடாமல்ஒப்பேற்றியிருக்கின்றது ஜனாதிபதி தரப்பு.

நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிநிதியத்துக்கான கூட்டம் நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அந்த நிதியத்தின் உறுப்பினரான சம்பந்தனும் அக்கூட்டத்தில் பங்கு பற்றினார். அச்சமயம் கூட்டத்திலும், தனித்தும் சம்பந்தனுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாடினார். ஆனால் அச் சமயம், இன்னும் ஓரிரு மணித்தியாலத்தில் நல்லாட்சி அரசைத் தாம் வீட்டுக்கு அனுப்பப் போகின்றார் என்றோ, அதனால் உங்களின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோகப் போகின்றது என்றோ எந்தச் சமிக்ஞையையும் சம்பந்தனுக்குக் காட்டவில்லை மைத்திரி.

நேற்று மாலை 5மணி அளவில் நல்லாட்சி அரசில் மிச்சமாக அங்கம் வகிக்கும் 23 சு.கவின் எம்.பிக்களையும் ஒரு கலந்துரையாடலுக்கு அழைத்தார் ஜனாதிபதி. ரணிலைத் தொடர்ந்தும் பிரதமராக வைத்திருக்க முடியாது என்றார். மாற்று ஒருவரைப் பிரதமராக நியமிக்கப் போகிறேன் என்றார். ஆனால், அந்த மாற்று நபர் மஹிந்த ராஜபக்ஷ என்றோ அல்லது வேறு யாரோ என்றோ அவர் குறிப்புத் தன்னும் காட்டவில்லை. ஆனால் ஜனாதிபதியின் பேச்சில் அவர் ஐ.தே.கட்சியிலிருந்து வேறு ஒருவரைப்பிரதமராக்கப்போகிறார் என்றே சு.கவினர் எண்ணினர்.

திடீரென ஜனாதிபதியின் உத்தரவில்ஒருகடிதம்அங்குகொண்டு வரப்பட்டது. அதில் நல்லாட்சி அரசுக்கான ஆதரவை சு.கவும் உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விலக்கிக் கொள்வதாக எழுதப்பட்டிருந்தது. அதில் கையொப்பமிடுமாறு ஐ.ம.சு. கூட்டமைப்பின் செயலாளரான அமைச்சர் மஹிந்த அமரவீர வற்புறுத்தப்பட்டார். மஹிந்த ராஜபக்ஷ தரப்பை முழுதாக எதிர்க்கும் சு.கவினரான அமைச்சர்கள் மஹிந்த அமரவீர, துமிந்த திஸநாயக்க போன்றோர் உடனடியாக நல்லாட்சிஅரசிலிருந்துவெளியேறும் திட்டத்துக்கு உடன்பட மறுத்தனர். ரணிலை வீட்டுக்கு அனுப்பிவிட்டு மஹிந்தவைப் பிரதமராக்கும் எண்ணத்துடனேயே இந்தக் காய் நகர்த்தலை மைத்திரி முன்னெடுக்கின்றார் என்பது அப்போதும் கூட மஹிந்த அமரவீர, துமிந்த திஸநாயக்க போன்றோருக் கும் தெரிந்திருக்கவில்லை.

மஹிந்த அமரவீரவின் ஒப்பத்தை வற்புறுத்தி பெற்றதும் அந்தக் கடிதத்தின் ஒரு பிரதி சபாநாயகருக்கு அனுப்பப்பட்டது. அதன் பின்னர்தான் புதிய பிரதமராகப் பதவியேற்க மஹிந்த ராஜபக்ஷ வந்து கொண்டிருக்கின்றார் என்ற செய்தி இதுவரை அரசில் மிஞ்சியிருந்த சு.கவின் எம்.பிக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின்படி அரசமைப்பின் 19ஆவது திருத்தப்படி பதவியில் இருக்கும் ஒரு பிரதமரைப் பதவி விலக்குவது சுலபமான விடயம் அல்ல.

இது தொடர்பான அரசமைப்பு விதிகளின் சிங்கள மொழிபெயர்ப்பில் உள்ள ஒரு மயக்கமான வசனத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி அந்த வாசகத்தின் அர்த்தம் ஜனாதிபதிக்கு இதில் முடிவெடுக்கும் அதிகாரம் உள்ளது என்பது போன்ற ஒரு வியாக்கியானத்தை சட்டமா அதிபரிடம் பெற்று அதன் மூலம் இந்தத் தந்திரோபாய நகர்வை முன்னெடுத்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால.

இப்படித் தன்னைப் பதவி விலக்கியமைக்கு எதிராக ரணில் நீதிமன்றுக்குப் போகலாம். ஆனால், எது, எப்படி என்றாலும் இதில் இறுதியில் விடயத்தைத் தீர்மானிக்கப் போவது எம்.பிக்களின் ஆதரவு பற்றிய அட்சரகணிதக் கணக்குத்தான்.

ரவிகருணாநாயக்கதலைமையிலான ஒரு குழு ஐ.தே.க. பக்கத்திலிருந்துமஹிந்தபக்கம்பாய்ந்துவிட்டது என்று நேற்றிரவு ஒரு பேச்சடிபட்டது. ஹக்கீமின் முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத்தின் கட்சி, மனோகணேசன் திகாம்பரம் ராதா கிருஷ்ணன் ஆகிய முத்தரப்பின் ஆறு எம்.பிக்கள் அணி என்பவை எல்லாம் பேரம் பேசி, அரசியல் குதிரையோட்டங்கள் நடத்தி, இனி எந்த முடிவுக்கு வரப்போகின்றன என்பதிலும் விடயங்கள் தங்கியுள்ளன.

இதேசமயம் , இதுவரை சு.கவில் இருந்தபடி மஹிந்த ராஜபக்ஷ தரப்பைக் கடுமையாக எதிர்த்து வந்த மஹிந்த அமரவீர, துமிந்த திஸ்நாயக்க போன்றோரும், இப்போது மதில்மேல்பூனையாகவே இருப்பர். அவர்கள் என்ன முடிவு செய்வர் என்பதும் தெரியாது. இவை எல்லாம் சேர்ந்தே பிரதமர் மஹிந்த தலைமையிலான அரசின் ஆயுளைத் தீர்மானிக்கும்.

இதற்கிடையில்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியவற்றின் ஆதரவுடன் தாம் நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பானமையை 113 எம்.பிக்களின் ஆதரவை பெறமுடியும் என்றால் அதனடிப்படையில் ஜனாதிபதியின் இந்தச்செயற்பாடு அரசமைப்பு விரோத நடவடிக்கை எனத்தெரிவித்து, அதற்கு எதிராக, ஜனாதிபதி மீது குற்றவிசாரணைப் பிரேரணை ஒன்று கொண்டு வந்து, அதனைதங்கள் கட்சியைச் சேர்ந்த சபாநாயகரிடம் ஒப்படைத்து, அவரை அதனை ஏற்க வைத்து, அதன் மூலம் உடனடியாக நாடாளுமன்றத்தை இடைநிறுத்தும் ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு விரைந்து 'செக்' வைப்பதற்கும், ஜனாதிபதி மீது தொடர்ந்து நடவடிகை எடுப்பதற்கும் ஐ.தே.க. திட்டமிடுவதாக நேற்றிரவு பேச்சடிபட்டது

நல்லாட்சி அரசு கவிழ்ந்ததால் தற்போதைய இனப்பிரச்சினை தீர்வுக்கான தற்போதைய முயற்சிகளும் குழம்பிபோய்விட்டன என்று கவலைப்படத் தேவையில்லை என்றார் இந்த விவகாரங்களுடன்தொடர்புபட்ட முக்கியஸ்தர் ஒருவர்.

ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் சேர்ந்து தராததை – அந்த முயற்சிக்கு ரணிலின் ஆதரவு தொடர்ந்து இருக்குமானால் – ஜனாதிபதி மைத்திரிபால பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய மூன்று பேருமே சேர்ந்து சாதாரண எம்பிக்களான சம்பந்தனுக்கும் சுமந்திரனுக்கும் தரக்கூடிய வாய்ப்பான சூழல் வந்திருக்கின்றது – என்று நேற்றிரவு கூறினார் அவர்.

- மின்னல்-

# சர்வதேசத்தில் பேசுபொருளாக மாறியுள்ள இலங்கை அரசியல்!

கொழும்பு, ஒக். 27

இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத மாற்றமானது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது.

குறிப்பாக சர்வதேச ஊடகங்கள் அனைத்திலும் இலங்கை அரசியல் மாற்றம் பிரதான தலைப்புச் செய்தியாக மாறியுள்ளது.

இலங்கையின் பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார். இந்நிலையில், இலங்கையுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள நாடுகள் மற்றும் இலங்கை தொடர்பாகக் கரிசனை கொண்டுள்ள நாடுகள் இவ்விடயத்தை உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவிநீக்கம் செய்துவிட்டு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை பிரதமராக்கியுள்ளாரென ஸ்ரெயிட் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதேபோன்று, இலங்கை அரசியல் நாடகம் வெளிப்பட்டுவிட்டதென என்.டி.ரி.வி. செய்தி வெளியிட்டுள்ளது.

அதேபோன்று பி.பி.ஸி, த ஹிந்து என முக்கிய ஊடகங்கள் இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள திடீர் அரசியல் மாற்றத்தை பிரதான செய்தியாக வெளியிட்டுள்ளன.(ஐ)

## நெருக்கடி நிலையை எதிர்கொள்ளத் தயார்

### மனோ கணேசன் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 27

நாட்டில் தற்போது எழுந்துள்ள நெருக்கடி நிலையை எதிர்கொள்ளத்தாம் தயாராக உள்ளதாக அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

புதிய பிரதமராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த பதவியேற்ற நிலையிலேயே அவர் இதனை அறிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேரும் தேசிய ரீதியாக எழுந்துள்ள நெருக்கடி நிலைமை தொடர்பில் விவாதிக்கிறோம் என்றும் அவர் கூறினார்.(ஐ)

## ரணிலுக்கு ரிஷாத் ஆதரவு

கொழும்பு, ஒக். 27

பிரதமர் ரணில் விக்கரசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சிக்கு தொடர்ந்தும் ஆதரவு வழங்கத் தயார் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் அமைச்சர்களான அமீர் அலி மற்றும் ரிாத் பதியுதீன் ஆகியோர் நேற்றிரவு அலரிமாளிகையில் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

புதிய பிரதமராக மஹிந்த சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ள நிலையில், இலங்கை அரசியலில் தளம்பல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஐக்கிய தேசிய கட்சிக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கவேண்டிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

இந்நிலையில் ஐந்து நாடாளுமன்றப் பிரிதிநிதித்துவத்தை கொண்ட ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பிரதமரைச் சந்தித்து ஆதரவை வழங்கியுள்ளது.(ஐ)

## அமைச்சர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக். 27

சுயாதீன தொலைக்காட்சி வளாகத்துக்குள் சென்ற அமைச்சர்கள் இருவர் மீது அங்குள்ள ஊழியர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களின் வாகனங்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து இரண்டு அமைச்சர்களும் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

புதிய பிரதமராக நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த நேற்று மாலை பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இதனை அடுத்து தலைநகரில் உள்ள பிரதான அரச அலுவலகங்களுக்குப் பலத்த பாதுகாப்பை வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டார்.

இவ்வாறான ஒரு நிலையில் நல்லாட்சியை கொண்டு வருவதற்கு பிரதான பங்களிப்பை வழங்கிய அமைச்சர் ஒருவர் மீதும் மேலும் ஒரு அமைச்சர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.(ஐ)

## மஹிந்தவுக்கு கோட்டா வாழ்த்து!

கொழும்பு, ஒக். 27

புதிய பிரதமரான மஹிந்த ராஜபக்ஷவை நான் வாழ்த்துவதில் மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் கொண்டிருக்கின்றேன் என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இப்போது ஒன்றாக இணைந்து நாம் ஒரு நிலையான மற்றும் முற்போக்கான நாட்டை உருவாக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மஹிந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பிரதமராக சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

இந்நிலையிலேயே அவரது சகோதரர் கோட்டபய தனது வாழ்த்தைத் தெரிவித்தார்.

# 'றோ'வுடன் தொடர்புடையோர் யார்? ஆதாரங்களுடன் வெளிப்படுத்துங்கள்

## அமரவீரவிடம் நாமல் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 27

இந்தியாவின் 'றோ' புலனாய்வுப் பிரிவுடன் தொடர்பு வைத்திருக்கும் அமைச்சர்கள் உள்ள அமைச்சரவையில் அங்கம் வகிப்பது குறித்து அமைச்சர் மகிந்த அமரவீர வெட்கப்படவேண்டும்.

இவ்வாறு மஹிந்த அணியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்–

நாட்டு மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அமைச்சர்கள் இந்தியாவின் 'றோ' புலனாய்வுப் பிரிவுடன் தொடர்பு வைத்திருக்கமாட்டார்கள் என்பதையே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார். ஆனால், தான் இருக்கும் அமைச்சரவையில் இருப்பவர்கள் பற்றி நம்பிக்கை இல்லாமல் மஹிந்த அமரவீர கருத்து வெளியிட்டுள்ளார்.

'றோ' புலனாய்வுப் பிரிவுடன் தொடர்பு வைத்திருக்கும் அமைச்சர்கள் உள்ள அமைச்சரவையில் அங்கம் வகிப்பது குறித்து மகிந்த அமரவீர வெட்கப்படவேண்டும். அமைச்சர்கள் சிலர் 'றோ' புலனாய்வுப் பிரிவுடன் தொடர்பில் உள்ளார்கள் என்று மஹிந்த அமரவீர கூறியுள்ளமை பாரதூரமான விடயம். இது தொடர்பில் மஹிந்த அமரவீர ஆதாரங்களை வெளிப்படுத்தவேண்டும். அவர்கள் யார் என்பதை மக்கள் முன்னிலையில் அறிவிக்க வேண்டும் – என்றார்.(ஐ)

## நடு வீதியில் திடீரென தீப்பற்றியது ஓட்டோ


ஏழாலை வடக்கு சிவகுரு கடையடியில் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ திடீரென்று தீப்பிடித்து முற்றாக எரிந்துள்ளது.

நேற்று முற்பகல் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த ஓட்டோ ஏழாலை வடக்கு, சிவகுரு கடையடியில் பயணித்துக் கொண்டிருந்தபோது திடீரென்று தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது.

ஓட்டோச் சாரதி கீழிறங்கி ஏனையவர்களின் உதவியுடன் தீயை அணைக்க முற்பட்டபோதும் அது முற்றாக எரிந்துள்ளது.(ஜ-07)

# 30 ஆம் திகதிக்குள் ஆயிரம் ரூபா இல்லையேல் பதவி துறப்பேன்

## ஆறுமுகன் தொண்டமான் சபதம்



கொழும்பு, ஒக். 27

பெருந்தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்கமுடியா விட்டால் எம்.பி.பதவியை தான் இராஜினாமா செய்வார் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான ஆறுமுகன் தொண்டமான் அறிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுக்கொடுப்பதற்கு அரச தரப்பிலிருந்து கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்படாவிட்டால், பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களிக்கப்படும் என்றும், அரசுக்கு வழங்கப்படும் ஆதரவு மீள்பரிசீலனை செய்யப்படும் என்றும் அமைச்சர் திகாம்பரமும், இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணனும் அறிவிப்பு விடுத்துள்ளது வரவேற்கத்தக்கது.

கடந்தமுறையும் ஒன்றரை வருட இழுத்தடிப்பின் பின்னரே சம்பள உயர்வு வழங்கப்பட்டது. இம்முறையும் அதற்கு இடமளிக்கமுடியாது. எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் உரிய தீர்வை தொழிலாளர்களுக்கு அதாவது 1000 ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாவிட்டால் எம்.பி. பதவியை இராஜினாமா செய்வேன்.

மக்களைவிட எமக்கு பதவிகள் முக்கியமல்ல. மக்களோடு மக்களாக வாழவே விரும்புகின்றோம்– என்றார்.(ஐ)

# பத்து மாதங்களுக்குள் 2,700 முறைப்பாடுகள்

## இலஞ்சம்,ஊழல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 27

வருடத்தின் கடந்த காலப் பகுதியில், 2,700 முறைப்பாடுகள் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்ற விசாரணை ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

அவற்றில் 1699 முறைப்பாடுகள் மேலதிக விசாரணைக்காக எடுக்கப்பட்டுள்ளதாகவும், இலஞ்சச்சட்டத்திற்கு முரணான மற்றும் போதுமான தகவல்கள் இல்லாத 772 முறைப்பாடுகள் விசாரணைக்கு எடுக்கப்படவில்லை என்றும் அந்த ஆணைக்குழு கூறியுள்ளது.

ஊழல் சம்பந்தமாக 1169 முறைப்பாடுகளும், இலஞ்சம் சம்பந்தமாக 388 முறைப்பாடுகளும் முறையற்ற விதத்தில் சொத்துச் சேகரித்தல் சம்பந்தமாக 83 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழு இந்த வருடத்தில் கடந்த காலப் பகுதியில், நாடு முழுவது நடத்திய சுற்றிவளைப்புக்களில் 36 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களில் 34 பேர் அரச அதிகாரிகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நீதவான் நீதிமன்றங்களில் 15 வழக்குகளும் மேல் நீதிமன்றங்களில் 25 வழக்குகளும்தாக்கல்செய்யநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் குற்ற விசாரணை ஆணைக்குழு கூறியுள்ளது.(ஐ)

# விக்னேஸ்வரனின் பிளவினால் கூட்டமைப்பு பலவீனப்படாது

## கூறுகின்றது தமிழரசுக் கட்சி

கொழும்பு, ஒக். 27

கூட்டமைப்பைப் பிளவுபடுத்துமளவுக்கு விக்னேஸ்வரன், ஒன்றையும் கிழித்துக் கொண்டு செல்லவில்லை. ஏற்கனவே ஒரு சகோதரர் போயிருக்கின்றார். அதுபோன்று இன்று முன்னாள் வடக்கு முதலமைச்சரும் போயிருக்கின்றார். இதனைக்கூட்டமைப்பின்பிளவுஎன்றுசொல்லமுடியாது.

இவ்வாறு கூறினார் தமிழரசுக் கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கம்.

வடமாகாணமுதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன், புதியக் கட்சியை ஆரம்பித்தமை தொடர்பில் மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழ் மக்கள் பேரவையை விக்னேஸ்வரன் தொடங்கினார். அதனை அரசியல் சாராத அமைப்பு என்றார். இன்று தமிழ் மக்கள் கூட்டணிக்குப் போய்விட்டார். தமிழ் மக்கள் பேரவையில் இனித் தான் இல்லையென்று தெளிவாகக் கூறிவிட்டார். அப்படியானால்தமிழ்மக்கள்பேரவைஅநாதையாக்கப்பட்டு விட்டதா?

அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்க்கும்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூளையென வர்ணிக்கப்பட்ட அமரர் நவரெட்ணம், கட்சியைவிட்டு வெளியேறியபோது அப்போது அதுவோர் அலையாகவே இருந்தது. ஆனால், காலப்போக்கில் அந்தவிடயம் இருந்த இடம்தெரியாமல்போயிவிட்டது.

அதுபோலவே, வட மாகாண முன்னாள் அமைச்சர்அனந்திசசிதரனும்கட்சியொன்றை உருவாக்கியுள்ளார். விக்னேஸ்வரன், தமிழ் மக்கள் கூட்டணியைப் பிரகடனப்படுத்தியுள்ளார், சுரேஷ் பிறேமச்சந்திரன், எம்மை விட்டு விலகியும் விலகாமலும் ஏற்கனவே இருக்கின்றார். பெரிய அரசியல் கட்சிகளில் எல்லாம் இவ்வாறு நடப்பது சாதாரண விடயமாகவே நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பிரிந்துசென்றவர்களுடன் பேசுவதற்கு நாங்கள் என்றும் தயாராகவே இருக்கின்றோம். மக்களும் அவர்களுடன்பேசவேண்டும்நாங்கள்விக்னேஸ்வரனை வலிந்து அரசியலுக்குள் அறிமுகப்படுத்தினோம், மிகப்பெரும் எதிர்பார்ப்புடன் அறிமுகப்படுத்தினோம்.

விக்னேஸ்வரன் என்பதற்காகவோ, அவரது ஆளுமையை கருத்தில் கொண்டோ நாங்கள் அவரை வலிந்து அரசியலுக்குள் இழுக்கவில்லை. அப்போது பொதுக்கூட்டங்களில் பேசும்போது தமிழர்கள் தொடர்பாக நேரிய சிந்தனையுடன் இருப்பதாக அப்போது வெளிப்படுத்தி வந்தார். அவரது அந்த கொள்கை கோட்பாடுகளுக்கு மேலாக உயர்நீதிமன்ற நீதியரசர் என்கின்ற அந்த உருவம் காரணமாக நாங்கள் கவரப்பட்டோம்.

குறிப்பாக எங்களது மத்திய குழுவில் வடமாகாண முதலமைச்சர்வேட்பாளராகவிக்னேஸ்வரனை நியமிக்கவேண்டும் என்ற பிரேரணையை நான்தான் கொண்டுவந்தேன். மிகுந்த எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் இருந்தோம். இணைந்து தேர்தல் பிரசாரங்களைமேற்கொண்டோம். பாரியவெற்றியைப் பெற்றார். உலகத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாக இருந்தது. ஆனால் தமிழர்களின் வரலாறு இவ்வாறு துன்பங்களைச் சுமந்தே செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலேயே இருக்கவேண்டுமோ தெரியவில்லை.

விக்னேஸ்வரன் படிப்படியாக எங்களுடன் ஒத்துழைத்துச் செல்லாத நிலையே இருந்து வந்தது. அவர் கட்சி சாராதவர் என்று தன்னை கூறினாலும் அவர் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகவே தேர்தலில் போட்டியிட்டார். தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டங்களுக்கு அழைத்தபோதிலும் அவர் ஒரு கூட்டத்துக்கும் வரவில்லை.

விக்னேஸ்வரனின் பிரிவு என்பது உடனடியான ஒரு சலனத்தை ஏற்படுத்தும். அரசமைப்பில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. காலப்போக்கில் எல்லோரும் தமிழ் மக்களின் பிரச்சினையை வென்றெடுக்கும் அவசியத்தை உணரவேண்டும் – என்றார். (ஐ)

# கொழும்பு கொள்கலன் முனையம் இந்திய அரசுக்கு வழங்கப்படாது

## ஜனாதிபதி மைத்திரி விடாப்பிடி

கொழும்பு, ஒக்.

கொழும்புகிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு விட்டுக்கொடுப்பதில்லைஎன்பதில், ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன விடாப்பிடியான நிலைப்பாட்டில் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை, துறைமுகங்கள், கப்பல்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க, தெளிவுபடுத்தினார்.

கொழும்புகிழக்கு கொள்கலன் இறங்குதுறையை, இலங்கை துறைமுக அதிகார சபையே வைத்திருக்கும்.

கடந்த ஆண்டு, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ்க்கும், இலங்கையின் அனைத்துலக வணிக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்பாட்டில், கொழும்புகிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவின் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்வது பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லை.

பொதுவாக கொழும்புத்துறைமுகக் கொள்கலன் முனையத்தை கூட்டாக அபிவிருத்தி செய்வது என்றே கூறப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் மேற்குகொள்கலன்முனையத்தை இந்தியாதாராளமாக அபிவிருத்தி செய்யலாம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது அண்மைய புதுடில்லிப் பயணத்தின்போது, ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை, இந்தியப் பிரதமருக்குத் தெளிவுபடுத்தியிருக்கவேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் இருந்து நாடுதிரும்பிய பின்னர், அமைச்சரவைப் பத்திரத்தின் மீது முடிவெடுப்பதை ஒருவாரம்பிற்போடுமாறுகோரினார்.

இந்த விடயம் தொடர்பாக இந்தியத் தூதுவரை பிரதமர் சந்திக்க வேண்டியிருக்கிறது. இந்தியத் தூதுவரிடம் எமது நிலைப்பாட்டை தெரியப்படுத்துவோம்.

இந்தியாவின் உதவியுடன், மேற்கொள்ளப்படும் திட்டங்களில் தாமதம் குறித்து இந்தியப் பிரதமர் கவலை வெளியிட்டுள்ள நிலையில், இந்தத் திட்டங்களைத் துரிதப்படுத்தும், நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அமைச்சர்களே முன்னெடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# ரவியின் வீட்டை ட்ரோனில் படம் பிடித்த இருவர் கைது

கொழும்பு, ஒக். 27

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் வீட்டை, ட்ரோன் கமரா மூலம் வீடியோப் பதிவு செய்த இருவரை, அந்த ட்ரோன் கைது செய்ததாக, தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர், வனவளத் துறைத் திணைக்கள அதிகாரியென்றும் மற்றையவர், ட்ரோன் கெமரா இயக்குநர் என்றும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

நாடாளுமன்றவீதியில்அமைந்துள்ள தனது வீட்டை, ட்ரோன் கமரா மூலம் வீடியோ பதிவு செய்ததாக ரவி கருணாநாயக்க எம்.பியினால், நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம்தெரிவிக்கப்பட்டிருந்ததை அடுத்து, அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகச் சபாநாயகர்கருஜயசூரியதெரிவித்திருந்த நிலையிலேயே மேற்படி இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், வன வளத் துறைத்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் மரக்கன்று நடும் வேலைத்திட்டத்துக்குத் தேவையானவீடியோபதிவொன்றே செய்யப்பட்டதாகவும் இதற்காக, ட்ரோன் கமரா மூலம் வீடியோ பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ட்ரோன் கமராவொன்றை வானில் செலுத்துவதாயின், சிவில் விமானச் சேவை அதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டும்என்பதோடு, அதுதொடர்பில், உரியபொலிஸ்நிலையத்துக்கும் அறிவித்திருக்க வேண்டும். இருப்பினும், இவ்வாறான நடைமுறையை, உரிய திணைக்கள அதிகாரி பின்பற்றியிருக்கவில்லையெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# இரத்தினபுரியில் மண் சரிவு; 16 குடும்பங்களுக்கு பாதிப்பு

கொழும்பு, ஒக். 27

இரத்தினபுரிப் பிரதேசத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக தேல பனகம பன்னிலந்த பிரதேசத்தில் நேற்று முன் தினம் மண்சரிவு ஏற்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் மலை உச்சிலிருந்து பாரிய அளவிலான கற்கள் மற்றும் பாரிய மரங்கள் மண் திட்டுகள் சரிந்து விழுந்துள்ளன.

இதனால் பாதிக்கப்பட்ட 16 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர்தத்தமது உறவினர்களின் இல்லத்தில் தஞ்சமடைந்தள்ளனர்.(ஐ)

# பாகிஸ்தான் பெண் கைது

கொழும்பு, ஒக்.

ரூபா45 இலட்சம்பெறுமதியான 35 ஹெரோயின் போதை மாத்திரைகளை விழுங்கிக்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த பாகிஸ்தான் வயோதிப் பெண் (வயது –67) கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

அவருடன் பயணித்த பாகிஸ்தானைச் சேர்ந்த ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டார் என்று கட்டுநாயக்க விமான நிலைய போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் வயோதிப் பெண்ணின் வயிற்றுக்குள்ளிலிருந்து 350 கிராம் எடைகொண்ட 35 ஹெரோயின் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## முதல்வரின் புதுக்கட்சி

**ஈழத் தமிழர்களின் அரசியல் போக்கில் ஒரு முக்கிய கட்டம் கடந்திருக்கின்றது. 'வாராது வந்த' வடக்கு மாகாண சபை முழுமையாக ஐந்து வருடங்களைக் கபளீகரம் செய்து ஏதும் பயனின்றி கலைந்திருக்கின்றது.**

**கம்பன் கழக ஜெயராஜ் சுட்டிக்காட்டியிருக்கின்றமை போல தமிழர் தரப்பு – வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி – ஆளுக்கு ஆள் குற்றச்சாட்டுப் பத்திரம் வாசித்தமை தவிர, அங்கு வேறெதுவுமே உருப்படியாக நடக்கவே யில்லை. அவர் உதாரணம் காட்டியமை போல வடமாகாண சபைப் பிரமுகர்களும் நமது சில அரசியல் தலைவர்களும் – எல்லோரும் ஒன்று கூடி, அங்கு 'மகாபாரதப் போர்' ஒன்றை கனகச்சிதமாக நடத்தி முடித்திருக்கிறார்கள். அவ்வளவே.**

**இனி, அடுத்தது என்ன?**

**தமிழீழத் தேசியத் தலைவரால் ஐக்கியப்படுத்தப்பட்டு, உருக்கொடுக்கப்பட்டு, தமிழர்களின் வாக்குப் பலத்தால் அங்கீகரிக்கப்பட்ட – தமிழர்களின் தேசியத் தரப்பு இதுதான் என சர்வதேச சமூகத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட – நிறுவன அல்லது நிறுவக ரீதியான கட்டமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குதான். அதற்கு மாற்றாக, தாம் ஓர் அணியை உருவாக்கும் சிலிர்ப்போடு எழுந்து நிற்கின்றார் வடக்கின் முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்.**

**மழை நாளுக்கும் மத்தியிலும், ஓர் ஆயிரம் பேரோடு நடந்த ஆரம்ப அறிவிப்புக் கூட்டமும், நீதியரசர் விக்னேஸ்வரனின் வழமை போன்ற நீண்ட பட்டோலை உரையும் மட்டும் கூட்டமைப்புக்கான மாற்றைக் கொண்டு வந்து விடுமா என்பது புறமொதுக்க முடியாத நியாயமான கேள்விதான்.**

**நீதியரசர் விக்னேஸ்வரன் புதிய கட்சி தொடங்குகின்றார். அதற்குப் பெயர் வைத்துப் பிரகடனமும் செய்தாயிற்று. கட்சியின் ஆரம்பப் பணிகளும் ஏற்கனவே தொடங்கிவிட்டன என்று அவர் அறிவித்தாலும் கூட அவர் அறிவித்தபடி அப்படி ஏதும் கட்சி வேலைகள் நடந்தமை பற்றிய தகவல் ஏதும் இதுவரை வெளியாகவில்லை.**

**கட்சியின் கொள்கைத் திட்டங்களாக அல்லது வழிகாட்டு நடவடிக்கைகளாக அமையக்கூடியவை என அவை பத்து விடயங்களை அங்கு அறிவித்திருந்தாராயினும், அவை கூட முற்கூட்டி யாருடனாவது பேசிப் பகிர்ந்து, கலந்துரையாடப் பட்டவையாகத் தெரியவில்லை. குறைந்தபட்சம், தன்னை அரசியல் ரீதியாக வளர்ப்பதற்கு உதவியதாக அவர் கூறும் தமிழ் மக்கள் பேரவையில் கூட அந்தக் கொள்கை விடயங்கள் குறித்து அவர் யாருடனாவது பேசினார் – கலந்துரையாடினார் – விவாதித்தார் – என்று கூறுவதற்கில்லை.**

**எவ்வாறு அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிப்பது பற்றிய தமது முடிவை இறுதி வரை மூடு மந்திரமாக வைத்திருந்து திடுதிப்பென கடந்த 24 ஆம் திகதியன்று பிரகடனப்படுத்தினாரோ –**

**எவ்வாறு தமது புதிய கட்சியின் பெயரைக் கூட மறை பொருளாக வைத்திருந்து விட்டு அன்று திடீரென அறிவித்தாரோ –**

**அதேபோன்றுதான் கட்சியின் நடவடிக்கைகளும் மூடு மந்திரமாக இருக்கும் போல. கட்சியில் அவரை விட்டால், இப்போதைக்காவது அடுத்தது யார், கட்சியின் ஒழுங்கமைப்புக்கு– அமைப்பு வேலைகளுக்கு – அவரோடு சேர்ந்தியங்குவதற்கு அனுமதிக்கப்பட்டோர் யார், யார், கட்சி அமைப்பு நடவடிக்கைகள் என்ன விதத்தில் அமையும் என்பவை குறித்துத் யாருக்கும், எதுவும் தெரியாது.**

**இன்றைய நிலையில், இதுவரை – மக்களைப் பார்த்து இது எனது கட்சியல்ல; உங்கள் கட்சி என்று அவர் உரைத்தமை தவிர, அந்த உத்தேசப் புதுக்கட்சிக்கு அவர் சூட்டியிருக்கும் பெயரைத் தவிர, வேறெதுவும் மக்களின் முன் வைக்கப்படவில்லை.**

**முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன் அறிவித்த 'தமிழ் மக்கள் முன்னணி'யிலும், அனந்தி சசிதரன் அறிவித்த 'ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்திலும்' ஓர் ஒற்றுமை இருக்கிறது. இந்த இரண்டையும் அறிவித்த ஸ்தாபகப் பிரமுகரைத் தவிர, அந்தக் கட்சியில் அல்லது அமைப்பில் அடுத்து அவரோடு சேர்ந்தியங்கப்போகும் அடுத்த நபர் – அல்லது அடுத்த உறுப்பினர் – யார் என்பதும் கூடத் தெரியாமல் அவற்றின் அறிவிப்பு ஒன்று கூடல் நடந்து முடிந்துவிட்டது.**

**கட்சியை முறைப்படி ஒழுங்கமைப்பதற்கான பூர்வாங்க வேலைகளைக் கூட முன்னாள் முதல்வர் இன்னும் ஆரம்பிக்கவில்லை என்பதையே இது காட்டுகின்றது.**

**ஆனால், அதற்கு இடையில் அவரோடு எந்த அணி கூட்டுச் சேர் வது என்ற குடுமிப் பிடிச்சண்டை தொடங்கிவிட்டது. அவர் தமது கட்சிக்கு ஒரு யாப்புக் கூட உருவாக்கும் வேலையைச் செய்தாரோ தெரியவில்லை. அதற்கு இடையில் அணிசேரக் கூடிய தரப்புகளின் சிண்டுமுடிப்பை சமாளிக்க வேண்டிய சிக்கல் அவருக்கு.**

**இந்தப் பிணக்குகளை அவர் கையாளும் போதுதான், சம்பந்தரும் மாவையும் கூட்டமைப்பில் ஏனைய கட்சிகளைத் தக்கவைப்பதற்கு என்ன பாடுபடுவார்கள் – பட்டிருப்பார்கள் – என்பதும் நீதியரசருக்குத் தெரிய– புரிய– வரும்.**

**கட்சி அரசியலில் முதல்வர் படிப்பதற்கு இன்னும் ஏராளமான பாடங்கள் இருக்கின்றன. அவர் மலைத்துப் போய் விடாமல் இருந்தால் சரி.**

# மனித உரிமை விடயத்தில் நல்லாட்சி அதிக கரிசனை

## இந்தியாவில் கூறினார் அமைச்சர் ரவூப் ஹக்கீம்




சென்னை, ஒக். 27

யுத்தம் காரணமாக இந்திய அகதிமுகாம்களில்வாழும் இலங்கைத்தமிழர்களை மீள்குடியேற்றுவதில் சர்வதேச சமூகத்துடன் இணைந்து தேவையான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறோம். அடிப்படை மனித உரிமைகள் விடயத்தில் கடந்த அரசைவிட தற்போதைய அரசு அதிக கரிசனையுடன் செயற்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்தியாவில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு இஸ்லாமிய சமுதாயம் நிகழ்த்தும் நினைவேந்தல் நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுச் சென்னை சென்றடைந்தார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்குச் சென்னை விமான நிலையத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டதோடு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் மற்றும் அரசியல் பிரமுகர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அதன்பின் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்கும் இடையிலுள்ள இழுபறிநிலைக்குத் தீர்வுகாணவேண்டும். இதற்காக இருநாடுகளின் மீனவசங்கங்கள் உள்ளடங்கலாக வெளியுறவு அமைச்சு மட்டத்திலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்களின் சிபார்சுகளில் நாங்கள் தீவிர கரிசனை செலுத்திவருகிறோம். இலங்கை, இந்திய நாடுகளின் உறவுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையிலும் சுமுகமானதொரு தீர்வை நாங்கள் மேற்கொள்வோம்–என்றார்.(ஐ)

# வடக்கு மகளிர் விவகார அமைச்சின் அதிகாரிகளை சந்தித்தார் ஆளுநர்



யாழ்ப்பாணம், ஒக். 27

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் உட்பட அதிகாரிகளை நேற்று முன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள் கூட்டுறவு உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் தொழிற்துறை உள்ளிட்டவற்றின் அதிகாரிகளை அழைத்த ஆளுநர் மாகாணசபை ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப்பணிகள் தொடர்பிலும், பணிகள் முடிவடையாது இருக்கும் விடயங்கள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

மகளிர் விவகார அமைச்சின் ஊடாக எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப்பணிகள், மக்களுக்கான சேவைகள், உடனடியாக மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் செய்யப்பட வேண்டிய பணிகள் குறித்தும் கேள்வி எழுப்பினார்.

மக்களுக்கு சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்காக அனைத்து அதிகாரிகளும் தம்மை தயார்படுத்திக் கொள்வது அவசியமாகின்றது என்று தெரிவித்த ஆளுநர், சிறு சிறு தொழிற்சாலைகளை, கைத்தொழில்களை மேற்கொள்ள முன்வருபவர்களுக்கு சிரமம் கொடுக்காது அனைத்து வசதிகளையும் அனுமதிகளையும் விரைவாக வழங்கக்கூடிய வகையிலான அலுவலகம் ஒன்றை அமைச்சில் நிறுவிக்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (ஐ)

# நான்கு மாவட்டங்களில் மண் சரிவு அபாய நிலை

கொழும்பு, ஒக். 27

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக நான்கு மாவட்டங்களுக்கு மண் சரிவு அபாயஎச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

கண்டி, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அந்நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப்கொடிப்பிலி நேற்று வெள்ளிக்கிழமை கூறியுள்ளார்.

இதேவேளை, கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் சடுதியாக உயர்ந்துள்ளதாகக் கடமையிலுள்ள பொறியியலாளர் தெரிவித்தார்.

நீர்மட்டம் உயர்ந்து நீர் வழிந்தோடும் நிலை ஏற்பட்டுள்ளதால், நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் தானாகத் திறக்கப்படக்கூடுமென்றும் பொறியியலாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆகையால் அந்த நீர்த்தேக்கத்தை அண்டிவாழும் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.(ஐ)

## ஹெரோயினுடன் 6 பேர் கொழும்பில் கைதாகினர் துப்பாக்கியொன்றும் மீட்பு

கொழும்பு, ஒக். 27

கொழும்பு மற்றும் கொழும்பு புறநகர் பகுதிகளில் கடந்த 15 மணிநேரத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது ஹெரோயினுடன் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பில் பெண் ஒருவர் உள்ளடங்கலாக ஆறு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புக்கள் கொஸ்கொட , பேலியகொடை, பொரளை மற்றும் கொஹுவல ஆகிய பகுதிகளில் இடம்பெற்றதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## நாளை

28.10.2018
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: ரோகினி மு.ப. 9.32 வரை
திதி :சதுர்த்தி மு.இ. 6.37 வரை
சுபநேரம் : 9.03 – 10.33 வரை
இராகுகாலம் : 4.33 – 6.03 வரை

# கருணா, கே.பிக்குச் சுகபோகம் கைதிகளுக்கு தொடர்ந்து சிறை

## சார்ள்ஸ் நிர்மலநாதன் சபையில் சீற்றம்

கொழும்பு, ஒக். 27

கருணா மற்றும் கே.பி. போன்றவர்கள் அமைச்சுப் பதவியிலும் அரசின் பாதுகாப்பிலும் இருக்கலாம் என்றால், ஏன் சிறு சிறு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யபடவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கேள்வியெழுப்பினார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு, நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் கொண்டுவந்த சபை ஒத்தி வைப்புவேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதமேந்திய போராட்டத்திற்கு பங்களிப்புச் செய்தார்கள் அல்லது உதவிகளைப் புரிந்தார்கள் என தமிழ் அரசியல் கைதிகள் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் விடுதலைப்புலி உறுப்பினர்களைப் பயிற்றுவித்தவர்கள், அவர்களை வழிநடத்தியவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசில் அமைச்சர்களாக இருந்திருக்கின்றார்கள்.

குறிப்பாக விநாயகமூர்த்தி முரளிதரன் எனக் கூறப்படும் கருணா அம்மான் என்பவர் தமிழீழ விடுதலைப் புலி அமைப்பின் தளபதியாக செயற்



பட்டவர்.

இப்படி கட்டளையிட்டவர்களுக்குப் பிரதி அமைச்சுப் பதவி கொடுக்க முடியும் என்றால் ஏன் சாதாரண உதவி செய்ததாகக் கைது செய்யப்பட்டவர்களுக்குக் குறுகியகாலப் புனர்வாழ்வு வழங்கி விடுதலை செய்யமுடியாது?

கே.பி. என்பவரைச் சர்வதேசத்தில் இருந்து அழைத்து அவருக்கு இலங்கையில் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஏன் அவர் விடுதலைப்புலி உறுப்பினர் இல்லையா?

ஆனால் கே.பி என்பவரைச் சந்திப்பதற்காக மலேசியா சென்ற 3 பேர் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கின்றார்கள்–என்றார். (ஐ)

# வெடிபொருட்களுடன் இரண்டு பேர் சிக்கினர்

கொழும்பு, ஒக். 27

அநுராதபுரம் தலாவ பகுதியில் வெடிபொருட்களை வைத்திருந்த இருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையின் அநுராதபுரம் முகாமுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த 23 ஆம் திகதி தலாவ மொரகொட பகுதியிலுள்ள வீடொன்றில் நடத்திய தேடுதலின்போது ஆண் ஒருவரும் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து இரு கைக்குண்டுகள், 21 டெட்டனேட்டர்கள் மற்றும் 18 வோட்டஜெல் கம்பிகள், 17 துப்பாக்கி ரவைகள், ராம்போ வகை கத்திகளையும் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் தலாவ மொரகொட பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பது ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேக நபர்கள் இருவரையும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டுள்ள வெடிபொருட்களையும் தலாவ பொலிஸ் நிலையத்தில் அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர். (ஐ)

# பதுளையில் கைக்குண்டு மீட்பு

கொழும்பு, ஒக். 27

அதி சக்தி வாய்ந்த கைக்குண்டொன்றை பதுளைப் பொலிஸார் நேற்று முன் தினம் பதுளைப் பகுதியின் நாராங்கலை என்ற இடத்திலிருந்து மீட்டுள்ளனர்.

பொலிஸ் அவசர இலக்கமான 119 இக்கு கிடைக்கப் பெற்ற தகவலொன்றை அடுத்து விரைந்த பொலிஸார் நாராங்கலை என்ற இடத்தில் கைவிடப்பட்ட வீட்டுத் தோட்டத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கைக்குண்டை மீட்டனர்.

குண்டுகளைச் செயலிழக்கும் தியத்தலாவை இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு மீட்கப்பட்ட கைக்குண்டு செயலிழக்க வைக்கப்பட்டது. இது குறித்து இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (ஐ)

# போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு



வவுனியா, ஒக். 27

வவுனியா ரிசாத் பதியுதீன் முஸ்லிம் வித்தியாலய மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை நேற்று முன் தினம் காலை நடத்தினர்.

வவுனியா, சூடுவெந்தபுலவு, ரஹ்மத்நகர் ரிசாத் பதியுதீன் முஸ்லிம் வித்தியாலயம் முன்பாக ஆரம்பித்த இந்த விழிப்புணர்வு ஊர்வலம் சூடுவெந்தபுலவு பள்ளிவாசல் வரை ஊர்வலமாக வந்து பின்னர் அங்கிருந்து பாடசாலை முன்றலில் முடிவடைந்தது.

ஊர்வலத்தில் ஈடுபட்ட மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான சுலோக அட்டைகளை ஏந்தியிருந்தனர். இந்த ஊர்வலத்தில் அதிபர், ஆசிரியர்கள், பொலிஸார், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-100)

# சிங்கள இளைஞர்களை விடுவித்ததுபோல் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்குக

## அரவிந்த்குமார் எம்.பி. சபையில் வலியுறுத்தல்

கொழும்பு, ஒக். 27

1980 ஆம் ஆண்டு தென் இலங்கையில் பயங்கரவாதச் செயற்பாட்டில் ஈடுபட்டனர் எனக் கூறிக் கைது செய்யப்பட்ட பெரும்பான்மையின இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டதைப்போல, தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த் குமார் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நேற்று முன் தினம் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

இந்த நாட்டின் சாபக்கேடாகப் பயங்கரவாதத் தடைச் சட்டமும், அவசரகாலத் தடைச் சட்டமும் பல தசாப்தமாக இருந்து வருகின்றன. இதிலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தச் சட்டத்தின் மூலம் தனிப்பட்ட குரோதங்களை வைத்துக்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டதை கடந்த காலங்களில் நாம் பார்த்துள்ளோம். அந்த அளவு மோசமாக பயங்கரவாதத் தடைச் சட்டம் காணப்படுகின்றது.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஏன் கொண்டுவரப்பட்டது என அரசதரப்பினர் பல்வேறு காரணங்களைக் கூறினாலும் கூட, இதனால் ஆயிரக்கணக்கானவர்கள் சொல்லெண்ணா துன்பங்களை அனுபவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி வடக்கு –கிழக்கு மற்றும் மலையகம் என பல இளைஞர், யுவதிகள் இந்தப் பயங்கரவாதத்தடைச்சட்டத்தினால் பாதிக்கப்பட்டனர். எனவே ஒரு ஜனநாயக நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தொடர்ந்தும் வைத்திருப்பது பொருத்தமான ஒன்று அல்ல.

மேலும் 1980 களில் தென்னிலங்கைப் பெரும்பான்மைச் சமூக இளைஞர்கள் புரட்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் பயங்கரவாதிகள் இல்லை. ஏனெனில் அவர்கள் ஜனநாயக முறையில் நாட்டில் ஆட்சி சரியில்லை எனக் கூறியே அன்று புரட்சியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆகவே அன்றைய அரசு அவர்களைப் பயங்கரவாதிகள் எனக் கைது செய்திருந்த போதும் அவர்கள் பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலைமை தமிழ் இளைஞர், யுவதிகளுக்கும், தமிழ் அரசியல் கைதிகளுக்கும் ஏற்படவேண்டும். அவர்களுக்கு பொது மன்னிப்போ புனர்வாழ்வோ வழங்கப்பட வேண்டும் –என்றார். (ஐ)

# படை அதிகாரியைத் திருப்பியனுப்பும் முடிவு; மனித உரிமைக் குழுவுக்குத் தொடர்பில்லை

## இலங்கை இராணுவம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 27

மாலியிலிருந்து இலங்கை இராணுவ அதிகாரி லெப்.கேணல் கலன அமுனுபுரவை மீள அழைக்குமாறு ஐ.நா. விடுத்த கோரிக்கைக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் எந்த வித தொடர்புமில்லை என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இராணுவ அதிகாரியைத் திருப்பி அனுப்ப ஐ.நா எடுத்துள்ள தீர்மானத்தில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பங்கு குறித்து கவலை எழுப்ப வேண்டியிருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த நிலையில் இராணுவம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் இலங்கை இராணுவத்தின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் விடுத்த கோரிக்கைக்கு ஏற்ப மாலியிலிருந்து இராணுவ அதிகாரி லெப்.கேணல் கலன அமுனுபுரவை மீள அழைப்பதற்கு இராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

ஐ. நா. அமைதிப்படையில் அங்கம் வகிக்கும் இராணுவத்தினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனரா? என்பதை விசாரணை செய்யும் பொறுப்பு இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படுவதற்கு முன்னரே லெப்.கேணல் கலன அமுனுபுரவின் பெயரை ஐ.நாவிடம் சமர்ப்பித்துவிட்டோம். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டுவிட்டனர்.

அவ்வேளை, நான்கு அதிகாரிகளின் பெயர் விவரங்களை ஐ.நாவிடம் சமர்ப்பித்தோம். ஐ.நா கலன அமுனு புரவை மாத்திரம் தெரிவு செய்தனர்.

தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டையடுத்து அவரை மீள அழைப்பதற்கும் இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் எந்தவித தொடர்புமில்லை – என்றுள்ளது.

இதேவேளை, மாலியில் ஐ.நா அமைதிப்படையில் பணியாற்றிய இராணுவக்கட்டளை அதிகாரிலெப்.கேணல் கலன அமுனுபுரவைத் திருப்பி அனுப்ப ஐ.நா. எடுத்துள்ள முடிவு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவலை வெளியிட்டார். அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இந்தக் கவலையை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விநாசகாலே விபரீதபுத்தி

- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -




உலகம் பரபரப்பாய் எதிர்பார்த்து,
ஏதோ தனிநாட்டையே பெற்றுவிட்டால்போல்,
கஷ்டப்பட்டு நாம் பெற்றுக்கொண்ட வடமாகாணசபை,
சாதனைகள் ஏதும் செய்யாமல்,
சப்பென்று தனது காலத்தை முடித்துக்கொண்டு விட்டது.
நிறைவு நாளில் முதலமைச்சரை எதிர்க்கட்சித் தலைவர்
குற்றஞ்சாட்டுகிறார்.
முதலமைச்சர் அவைத் தலைவரைக் குற்றஞ்சாட்டுகிறார்.
மொத்தத்தில் மிஞ்சியது குற்றப்பத்திரிகைகள்தான்.
யார் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது என்பதைவிட,
இவர்கள் நடத்தும் குற்றச்சாட்டு அஞ்சலோட்டத்தால்,
மாகாணசபையின் தோல்வி தெளிவாய் வெளிப்பட்டிருக்கிறது
என்பதே உண்மையாம்.

★ ★ ★

வடமாகாணத்தவர்கள் அறிவாளிகள்.
வடமாகாணத்தவர் திறமைசாலிகள்.
வடமாகாணத்தவர் ஆளுமையாளர்கள்.
வடமாகாணத்தவர்கள் தீர்க்கதரிசனமிக்கவர்கள்
என்றெல்லாம் பலர் மனதிலும் இருந்த கற்பனைகள்,
நம் மாகாணசபையின் செயற்பாட்டால் சுக்குநூறாகியிருக்கிறது.
தமிழ்க் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தரும்,
அவரது அடிப்பொடியான சுமந்திரனும்,
தம்மோடு இணைந்திருந்த மாற்றணியினரை அலட்சியம் செய்து,
கெஞ்சிக் கூத்தாடி முன்னைநாள் நீதியரசரை,
முதலமைச்சர் வேட்பாளாராய்க் கொண்டுவந்தபோது,
பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பலரும்கூட,
தமிழரின் கெட்டித்தனத்தைப் பாருங்கள்.
கட்சியைக் கடந்து ஓர் அறிவாளியை உள்ளீர்த்திருக்கிறார்கள்.
இவர்கள் கையில் ஒரு நாடு போனால் இப்படித்தான் திட்டமிட்டு,
அந்த நாட்டை உயர்த்திவிடுவார்கள் என்றெல்லாம் பரவலாகப்
பேசினார்கள்.
ஆனால் அத்தனை எண்ணங்களையும் வடமாகாணசபையின்
தோல்வி,
சுக்குநூறாய் உடைத்துச் சிதறடித்திருக்கிறது.
தோற்றது வடமாகாணசபை அல்ல ஈழத்தமிழரினம்!

★ ★ ★

கடும்போரால் பெரும் பாதிப்புற்று,
உயிரிழப்பு, உறுப்பிழப்பு, உடைமையிழப்பு என,
பல்வகை இழப்புக்களையும் சந்தித்து,
'அலமந்து நின்ற தமிழர்களை,
கைகொடுத்து நிமிர்த்தும் என பலரும் கருதிய வடமாகாணசபை,
சகோதர பகைக்களமாய் மாறி,
எவருக்கும் பயனின்றி வீணே வீழ்ந்திருக்கிறது.
முன்னாள் முதலமைச்சர் ஆரம்பித்து வைத்த உட்கட்சிப் பூசலை,
(இனி அவரை சுருக்கமாய் மு.முதல்வர் என்றே அழைப்போமாக!,
இச்சுருக்கத்திற்கு எவரும் வேறு அர்த்தம் கற்பித்தால்,
அதற்கு நான் பொறுப்பாளி அல்லன்.)
பல சகுனிகள் மெல்ல மெல்ல உசுப்பேத்தி,
குருதேத்திரம் வரை கொண்டு வந்திருக்கிறார்கள்.
தலைமை ஆசையோடு துரியோதனனாய் மு.முதல்வர் அவர்கள்.
ஆத்திரம் காட்டும் வீமனாய் சுமந்திரன்.
பொ(ய்)றுமைபேசும் தர்மனாய் சம்பந்தர்.
நடுவுநிலைமை போல் காட்டி,
பிரிவை ஊதிவிடும் சகுனியாய் தமிழ்மக்கள்பேரவை,
உறவுகள் பகைவளர்க்க எதிலும் ஒட்டாமல்,
நடுநின்றால்போல் நபுஞ்சகம் செய்யும்,
கிருபர், துரோணராய் சித்தார்த்தனும் அடைக்கலநாதனும்,
தம்பிக்குக் கிடைத்த பதவிக்காய்,
நன்றி காட்டும் கர்ணனாய் சுரேஷ் பிரேமச்சந்திரன்,
ஏதும் இயற்றமுடியாது பிழைகளுக்காய் ஓலமிடும் விதுரனாய்,
முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா.
நடுவுநிலைமை காட்ட பிழை உணர்ந்தும் பேசமுடியாத பீஷ்மராய்,
முன்னாள் சபை முதல்வர் சீ.வி.கே.சிவஞானம்.
இப்படியாய் என்றோ நடந்த பாரதப்போர்,
இன்றும் காட்சிப்படுத்தப்படுகிறது.
இவர்கள் மோதலில் பலியாகி துகிலுரியும் நிலையில்,
பாஞ்சாலியாய் நிற்கிறது நம் தமிழினம்.
அவளைக் காக்க அங்கு கண்ணன் வந்தான்.
ஈழத்தமிழினத்தைக் காக்க இங்கு எவர் வரப்போகிறார்?
எஞ்சி நிற்கும் கேள்வி இதுவேயாம்.

★ ★ ★

முன்னைக் கட்டுரைகளில் பலதரமாய்,
மு.முதல்வர்; மீது பல குற்றச்சாட்டுக்களை வைத்திருக்கிறேன்.
திரும்பத் திரும்ப ஒன்றையே சொல்லி என்ன பயன்?
அவரும் திருந்தப் போவதில்லை.
நம் இனமும் திருந்தப் போவதில்லை.
வடமாகாணசபைக்குள்ளும் வெளியிலுமாய்,
மு.முதல்வரை நோக்கி கேள்விகள் குவிகின்றன.
எதிர்க்கட்சித்தலைவர் தவராசா தனது கடைசி உரையிலும்,
நியாயபூர்வமான தனது கேள்விகளால்,
மு.முதல்வரை மூச்சுமுட்ட வைத்திருக்கிறார்.
ஒன்றுமில்லாத மு.முதல்வரின் உரைக்கு முதலிடம் கொடுத்து,
உண்மை பேசும் எதிர்க்கட்சித் தலைவரின் உரையை இருட்டடிப்புச்
செய்து,
தம் பத்திரிகா(அ) தர்மத்தைப் பறைசாற்றி நிற்கின்றன சில
ஊதுகுழல் பத்திரிகைகள்.
'இவர்தான் இடையூறு செய்தார் என்று,
மு.முதல்வர் விரல் நீட்டிய அவைத் தலைவர் சிவஞானம்,
தான் இடையூறு செய்யாது முதலமைச்சருக்கு உதவிய பட்டியலை
உதறித்தள்ளியிருக்கிறார்.
இவர்களது இந்தக் கேள்விகளுக்கு நியாயபூர்வமான பதில் சொல்
லமுடியாது,
போரில் பலியான புண்ணியர்களின் பெயர் சொல்லி,
தமிழினத்தின் வேரில் விம் பாய்ச்சி நிற்கிறார் மு.முதல்வர்
அவர்கள்.

★ ★ ★

வந்தபோது தாடியும் பொட்டுமாய் தவமுனிவராய்க் காட்சி தந்த,
மு.முதல்வரின் தோற்றம் இன்று முற்றாய் மாறி,
வலைவிரிக்கும் வஞ்சக வடிவமாய் பலராலும் பார்க்கப்படுகிறது.
பதவி ஆசை,
அவ் ஆசைக்காய் இனத்தைப் பிரிக்க நினைக்கும் இழிசெயல்,
நிர்வாகத் தோல்வி,
ஊழல் ஒத்துழைப்பு,
செய்நன்றி மறத்தல்,
தன் உணர்வு நோக்கிய பிடிவாதம்.
முயற்சியின்மை என,
மு.முதல்வரின் மேல் மற்றவர்களால் சாட்டப்படும் குற்றங்களின்
வரிசை,
அனுமார் வாலாய் நீண்டுகொண்டே போகிறது.
அதுபோலவே கேட்போர்க்குப் பதில் சொல்லமுடியாது,
ஆங்காங்கே நடக்கும் கூட்டங்களில்,
மு.முதல்வர் வாசித்து வரும் கட்டுரைகளின் நீளமும்,
அதே அனுமார் வாலாய் நீள்கின்றன.
மற்றவர்கள் தன்மேல் சாட்டும் குற்றங்களுக்கு,
பதில் இல்லாமலும், பதில் சொல்லாமலும் செயற்படும்,
மு.முதல்வரின் போக்கில் ஜனநாயகத்தன்மை சிறிதுமில்லை.

★ ★ ★

கடும் போர்க்காலத்தில் அரச அரவணைப்பில் உயர் பதவிகள்
வகித்திருந்து,
தமிழர் இழப்புப்பற்றி கருத்தேதும் கூட உரைக்காமலிருந்தவர்,
இன்று தன்னை சுதந்திரப்போராளியாய் வாயால் வளர்க்கிறார்.
அவரை ஊக்கப்படுத்தவும் ஒரு கூட்டம் சுழன்று செயற்படுகிறது.
அக்கூட்டத்தினரிடம் மு.முதல்வர் பற்றிய விசுவாசத்தைவிட,
தலைமைக்கனவுகளும் பதவிக் கனவுகளும்,
கூட்டமைப்பு மீதான தனிப்பகைகளுமே மேலோங்கி நிற்கின்றன.

★ ★ ★

கூட்டமைப்பில் தனிக்கோலோச்சலாம் என நினைந்து,
மற்றவர்களை மதியாது செயற்பட்ட தமிழரசுக்கட்சியினருக்கு,
மு.முதல்வரை முன்னிறுத்தி மற்றவர்கள் வைத்திருக்கும் சதுரங்கச்
'செக்,
அவர்களை முழி பிரட்ட வைத்திருப்பதும் உண்மையே.
மொத்தத்தில்,
இவர்கள்தாம் நம் இரட்சகர்கள் என அப்பாவித் தமிழ்மக்கள்
நினைத்திருந்த,
அரசியல் தலைவர்களால் மீண்டும் ஒருதரம் நம் இனம்
வீழப்போகிறது.

★ ★ ★

முன்பும் பலதரம் சொல்லியிருக்கிறேன்.
ஏமாறுகிறவர்கள் இருக்குமட்டும் ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான்
போகிறார்கள்.
பொய்யான தலைவர்கள் உருவாகின்றார்கள் என்றால்,
மக்கள் பொய்யானவர்களாய் இருக்கின்றார்கள் என்றுதான் அர்த்தம்.
போராளிகள் காலத்திலும் நாம் இதைத்தான் செய்தோம்.
வன்னி வரையும் தாய்மண் பற்றும்,
வன்னி தாண்டியதும் வெளிநாட்டுப் பற்றுமாய் வாழ்ந்தவர்கள்தான்
நாம்.

**வந்தபோது தாடியும் பொட்டுமாய் தவமுனிவராய்க் காட்சி தந்த,**
**மு.முதல்வரின் தோற்றம் இன்று முற்றாய் மாறி,**
**வலைவிரிக்கும் வஞ்சக வடிவமாய் பலராலும் பார்க்கப்படுகிறது.**
**பதவி ஆசை,**
**அவ் ஆசைக்காய் இனத்தைப் பிரிக்க நினைக்கும் இழிசெயல்,**
**நிர்வாகத் தோல்வி,**
**ஊழல் ஒத்துழைப்பு,**
**செய்நன்றி மறத்தல்,**
**தன் உணர்வு நோக்கிய பிடிவாதம்.**
**முயற்சியின்மை என,**
**மு.முதல்வரின் மேல் மற்றவர்களால் சாட்டப்படும் குற்றங்களின்**
**வரிசை,**
**அனுமார் வாலாய் நீண்டுகொண்டே போகிறது.**

இனவிடுதலைபற்றி வீரியமாய்ப் பேசிய பலர்,
வெளிநாடு ஒன்று விசாவுக்காய் கதவு திறந்தவுடன்,
பாய்ந்தோடிய பரிதாபத்தை பல தரம் பார்த்திருக்கிறோம்.
இப் பொய்மையை உணர்ந்ததால்த்தானோ என்னவோ,
இயக்கங்களும் மக்களை மந்தைகளாய் மேய்த்திருந்தன.
பொய் வளர்த்து நாம் பட்ட புன்மைகளுக்கு ஓர் அளவில்லை.
உலகமே அதிரும்வண்ணம் அழிவுகளைச் சந்தித்த பின்பும்,
இன்னும் நாம் திருந்தவில்லை.
இயக்கங்களைப் போலவே,
ஒற்றுமை குலைத்து தம் ஆணவ முனைப்போடு,
இன்றைய தலைவர்களும் செயற்படத் தொடங்கிவிட்;டனர்.
நிறுத்தும்! இந்த அநியாயத்தை என்று,
உறுதியாய் உரைக்காமல் பொய்ச் சுதந்திர உணர்ச்சி காட்டி,
அவரவர்க்கு ஏற்றாற் போல்,
வால் பிடித்து வழிமொழிந்து நிற்கிறது நம் இனத்தில் ஒரு கூட்டம்.

★ ★ ★

இனி என்ன நடக்கப்போகிறது?
எல்லோர் மனத்திலும் இக்கேள்வியே விஸ்வரூபம் எடுத்து
நிற்கிறது.
அளவுக்கதிகமாக பொறுமை காத்து வாய் மூடி நின்ற,
சம்பந்தரையே மதிக்காத மு.முதல்வர்,
கஜேந்திரகுமாருடனும், சுரேஷுடனுமா நல்லபடி உறவு
பேணுவார்?
காலம் இக்கனவை விரைவில் பொய்ப்பிக்கும்.
விரும்பினால் தமிழரசுக்கட்சியும் தன்னோடு இணையலாம் என்ற,
மு.முதல்வரின் ஆணவச்சிகர அறிவிப்பு வந்த கையோடு,
கஜேந்திரகுமாரின் தமிழ்;த் தேசிய மக்கள் முன்னணி,
கையுதறிக் கழண்டுவிட்ட செய்தியை,
நேற்றைய ஊடகச் செய்திகள் உறுதிப்படுத்துகின்றன.
இவர்கள்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தபோது,
மு.முதல்வருக்கு 'முண்டு கொடுத்தவர்கள்.
சித்தார்த்தன், சிவாஜிலிங்கம், சிற்றம்பலம் ஆகியோரும்,
ஒட்டாது நின்று தம் உணர்வைப் பதிவு செய்துவிட்டனர்.
மு.முதல்வர் கொழும்பு திரும்பும் நாள்,
அதிக தூரத்தில் இல்லை என்பதை அறியமுடிகிறது.

★ ★ ★

ஒளிவு மறைவின்றி நம் கண்முன் நடக்கும் காட்சிகள் இவை.
எந்த ஆதாரமுமின்றி இன்னும் மு.முதல்வரை,
பிரபாகரனுக்கு நிகராய் உரைத்து மகிழும் ஒருசிலர்,
இருக்கத்தான் செய்கிறார்கள்.
இத்தகையோரால்த்தான் நம் இனம் அழிவு காணப்போகிறது.

★ ★ ★

மேலும் கீழும் கோடுகள் போடு,
அதுதான் ஓவியம்.
நீ சொன்னால் காவியம் என்ற,
பழைய சினிமாப்பாட்டுத்தான் ஞாபகத்திற்கு வருகிறது.
நன்மை, தீமைகளை சார்பின்றி ஆராய்ந்து,
உண்மைவழியில் என்று நடக்கப்போகிறோமோ,
அன்றுதான் நம் இனத்திற்கு உயர்வு!
அதுவரை மீண்டும் மீண்டும் நம்முள் மோதி,
நம்மை அழிக்க நினைக்கும் எதிரிகளுக்கு நாமே செங்கம்பளம்
விரிப்போம்.
தமிழின வரலாற்றில் இது மூன்றாம் அத்தியாயம்.
மூன்றாம் அத்தியாயத்தின் முதல்பகுதியிலும்,
கடந்து வந்த பாதையைச் சிறிதும் கருதாமல்,
மூடநடைபோட முனைகிறோம்.
வடமொழியில் ஒரு தொடர் சொல்வார்கள்.
விநாசகாலே விபரீத புத்தி என்பதுவே அத்தொடர்.
அழிவுக்காலத்தில் புத்தி திரிபுபடும் என்பதே,
அத்தொடருக்காம் தமிழ் அர்த்தம்.
தமிழர்க்கு மீண்டும் புத்தி திரிபுபடத் தொடங்கிவிட்டது.
மீண்டும் ஒருதரம் பேரழிவைச் சந்தித்து,
அகிலமெலாம் சென்று அழ ஆயத்தம் செய்வோம்.

# தமிழக அரசியலில் அடுத்து என்ன? அதிரடித் திருப்பங்கள் ஏற்படலாம்!



சட்டப்பேரவையில் 20 தொகுதிகள் காலியாக உள்ள நிலையில் தமிழக அரசியலில் அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் எழுந்துள்ளது.

2016 தேர்தலில் 135 தொகுதிகளில் வென்று பெரும்பான்மையுடன் அ.தி.மு.க. ஆட்சி அமைத்தது. முதல்வராகவும், அ.தி.மு.க. பொதுச்செயலாளராகவும் இருந்த ஜெயலலிதா 2016 டிசம்பர் 5 ஆம் திகதி காலமானார். அதன்பிறகு அ.தி.மு.க. கட்சியிலும், ஆட்சியிலும் பல அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்நிலையில், தினகரன் ஆதரவு எம்எல்ஏக்கள் 18 பேரை பேரவைத் தலைவர் பி.தனபால் அதிரடியாக தகுதி நீக்கம் செய்தார். இந்த உத்தரவு செல்லும் என சென்னை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பளித்தது..

சட்டப்பேரவையில் 20 தொகுதிகள் காலியாக உள்ள நிலையில் தமிழக அரசியலில் அடுத்து என்ன நடக்கும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் எழுந்துள்ளது.

ஏனெனில் இந்த வழக்கில் 18 எம்எல்ஏக்களின் தகுதி நீக்கம் செல்லாது என தீர்ப்பு வந்திருந்தால் தினகரனின் கை ஓங்கியிருக்கும். மேலும் பல எம்எல்ஏக்கள் தினகரன் பக்கம் சென்றிருப்பார்கள். அதிமுக அரசு கவிழ்ந்திருக்கும். புதிய அரசை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தால் பொதுத்தேர்தல் நடந்திருக்கும்.

ஆனால், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பால் முதல்வர் பழனிசாமி அரசுக்கு நெருக்கடி தீர்ந்தது. ஆனால், இந்த நிலை தொடருமா அல்லது குழப்பம் அதிகரிக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்பு அரசுக்கு சாதகம் என்றாலும் அரசுக்கு ஆதரவான எம்எல்ஏக்களின் பலம் 116 ஆக குறைந்துள்ளது. இதில் 3 பேர் அ.தி.மு.கவின் இரட்டை இலைச் சின்னத்தில் வென்ற வேறு கட்சியினர்.

மீதமிருக்கும் 113 பேரிலும் 3 பேர் வெளிப்படையாகவே தினகரனுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால், எந்த நேரத்திலும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம்.திமுக – 88, காங்கிரஸ் –8, முஸ்லிம் லீக் –1 என தி.மு.க. கூட்டணிக்கு 97 எம்.எல்.ஏக்கள் உள்ளனர். எனவே, ஆட்சிக்கு எதிராக செயல்படுவதாகக் கூறி மேலும் சிலரை தகுதி நீக்கம் செய்யவும் முடியாது. அப்படி செய்தால் அ.தி.மு.கவின் பலம் குறைந்து, தி.மு.கவுக்கு சாதகமாகி விடும்.

ஜெயலலிதா வென்ற ஆர்.கே.நகர் தொகுதியில் தினகரனிடம் தோற்றதால் இடைத்தேர்தலை எதிர்கொள்ள அ.தி.மு.கவுக்கு தயக்கம் உள்ளது.

அதனால்தான் மழையை காரணம் காட்டி திருவாரூர், திருப்பரங்குன்றம் இடைத்தேர்தலை தள்ளிவைக்க வேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு தலைமைச் செயலாளர் கடிதம் எழுதினார். அதன்படி தேர்தலும் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது காலியாக உள்ள 20 தொகுதிகளுக்கும் தேர்தல் நடந்தால் அது அ.தி.மு.கவுக்கு சாதகமாக இருக்கும் என உறுதியாகக் கூற முடியாது. தி.மு.க. வலுவான கூட்டணியுடன் உள்ளது. தினகரன் வாக்குகளைப் பிரிப்பார். எனவே, தி.மு.க. அதிகமான தொகுதிகளில் வென்றால் அக்கட்சி ஆட்சி அமைக்கும் வாய்ப்பே உள்ளது.2019 ஏப்ரல் அல்லது மே மாதத்தில் மக்களவைத் தேர்தல் வரவுள்ளது. காலியாக உள்ள 20 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இப்போது இல்லாவிட்டாலும் மக்களவைத் தேர்தலுடன் சேர்த்து இடைத்தேர்தல் நடத்திதான் தீர வேண்டும்.

அ.தி.மு.க. பிளவுபட்டிருந்தால் வெல்வதும் கடினம். எனவே, அப்போது மாற்றங்கள் நிகழ வாய்ப்புள்ளது.மக்களவைத் தேர்தலில் தி.மு.க. அதிக இடங்களை வென்றால் காங்கிரஸ் ஆட்சி அமைக்கவே உதவிசெய்வார்கள். எனவே,அ.தி.மு.கவை இணைக்க பா.ஜ.க முயற்சி செய்வதாகவும், இது தொடர்பாக முதல்வர் பழனிசாமி, துணை முதல்வர் ஓபிஎஸ், தினகரன் ஆகியோரிடம் பா.ஜ.க. பேச்சு நடத்தி வருவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ள 18 பேரை பொறுத்தவரை உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம் அல்லது தேர்தலை சந்திக்கலாம் என்ற2 வழிகள் உள்ளன.

உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தால், 18 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் தள்ளிப்போகலாம். தினகரன் ஆதரவாளர்களில் ஒரு தரப்பினர் மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றும், மற்றொரு தரப்பினர் தேர்தலை சந்திக்க வேண்டும் என்றும் விரும்புகின்றனர்.உயர் நீதிமன்ற தீர்ப்பால்அ.தி.மு.க அரசுக்கு உடனடியாக எந்த ஆபத்தும் இல்லையென்றாலும், அடுத்தடுத்து என்ன நடக்கப் போகிறது என்பதைப் பொறுத்துதான் அரசு நீடிக்குமா என்பதை சொல்ல முடியும். மக்களவைத் தேர்தல் முடிவுகள் எல்லாவற்றுக்கும் விடையளிக்கலாம்.

## 18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்கத்தை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முடிவு



மதுரை,ஒக்27

18 எம்.எல்.ஏக்கள் தகுதிநீக்கம் செய்யப்பட்டதை உறுதி செய்து உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய டி.டி.வி. தினகரன் தரப்பினர் முடிவு செய்துள்ளனர்.

அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று தினகரனுக்கு ஆதரவாக செயல்பட்ட 18 எம்.எல்.ஏ.க்களையும் தகுதி நீக்கம் செய்து சபாநாயகர் பிறப்பித்த உத்தரவு செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.


இதையடுத்து அந்த 18 பேரிடமும், அம்மாமக்கள் முன்னேற்றக்கழக துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன் சந்தித்து ஆலோசனை நடத்தினார். மதுரை மாட்டுத்தாவணி, ரிங்ரோட்டில் உள்ள ஹோட்டலில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வதா? அல்லது இடைத்தேர்தலை சந்திப்பதா? என்பது குறித்து அனைவரிடமும் தினகரன் கேட்டார். அப்போது மேல்முறையீடு செய்ய வேண்டும் என சிலர் கருத்து தெரிவித்தனர்.

'மீண்டும் மேல்முறையீட்டுக்கு சென்றால் அதில் தீர்ப்பு வர தாமதமாகும். அது எடப்பாடி– ஓ.பன்னீர் செல்வம் தரப்புக்கு சாதகமாகவே இருக்கும். அதனால் மேல்முறையீடு செய்யாமல் இடைத்தேர்தலை சந்திக்கலாம்' என்று ஒரு தரப்பினர் ஆலோசனை தெரிவித்தனர். மற்றொரு தரப்பினரோ இடைத்தேர்தலை சந்தித்தால் பெரும் செலவு செய்ய வேண்டும் என்று கருத்து தெரிவித்தனர் எனத் தெரிகிறது.

இந்த ஆலோசனையின் முடிவில், தகுதி நீக்க வழக்கில் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வது என தீர்மானிக்கப்பட்டது. 18 பேரும் ஒருமனதாக இந்த முடிவை எடுத்துள்ளனர்

# சோதனை சர்வதேச மன்னிப்புச் சபையின் பெங்களூரு அலுவலகத்தில்!



சென்னை, ஒக். 27

பெங்களூரு நகரில் உள்ள அம்னெஸ்டி இன்டர்நேனல் (சர்வதேச மன்னிப்புச் சபை) அலுவலகத்தில் அமலாக்கல் இயக்குநரகம் நேற்று முந்தினம் சோதனை மேற்கொண்டுள்ளதாக குறைந்தது 2 வட்டாரங்கள் பி.பி.ஸியிடம் உறுதி செய்துள்ளன.

பிற்பகல் 2 மணியளவில் தொடங்கிய இந்த சோதனையில் ஆய்வாளர்கள் மற்றும் பிற நிர்வாகிகளின் தொலைபேசிகள் எடுத்து செல்லப்பட்டுள்ளன எனப் பெயர் சொல்ல விரும்பாத இந்த அமைப்பின் பணியாளர் ஒருவர் பி.பி.ஸியிடம் தெரிவித்துள்ளார்.

அந்நிய செலாவணி மேலாண்மை சட்டத்தின் (ஃபெமா சட்டம்) கீழ் தாங்கள் நிதிகள் பெறாததால், இந்தச் சோதனை ஏன் நடைபெறுகிறது என்பது புரியவில்லை என்று இன்னொரு பணியாளர் கூறியுள்ளார்.

மக்களின் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

இது பற்றி பவிசாரித்தபோது சட்ட அமலாக்க இயக்குநரகம் பதிலளிக்கவில்லை.

கிரீன் பீஸ் என்ற சுற்றுச்சூழல் அமைப்பின் அலுவலகத்தில் அமலாக்க இயக்குநரகம் சோதனை நடத்தி மூன்று வாரங்களுக்குப் பிறகு இந்த சோதனை நடக்கிறது.

பெயர் தெரிவிக்க விரும்பாத கிரீன் பீஸ் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஒருவர், எங்கள் அலுவலகத்தின் மீதான சோதனை முற்பகல் 11.30 தொடங்கி, மாலை 6 மணி வரை நடந்தது. அவர்கள் வாரண்ட் இல்லாமல் வந்தனர். கறாராகப் பேசினர். நாங்கள் வெளிநாட்டில் இருந்து நிதி பெறுவதில்லை. உள்நாட்டிலேயே நிதி திரட்டிக் கொள்கிறோம். எனவே ஃபெமா சட்டத்தின் கீழ் நாங்கள் வரமாட்டோம் என்று தெரிவித்தார்.

# பத்திரிகையாளர் கசோக்கி திட்டமிட்டே படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்

## சவுதியின் அரசு வழக்கறிஞர் தெரிவிப்பு

லண்டன், ஒக்.27

சவுதி பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி திட்டமிட்டே கொல்லப்பட்டார் என்கிறார் சௌதி அரேபிய அரசு வழக்குரைஞர் அல்-ஏக்பாரியா தெரிவித்துள்ளார்.

சவுதி – துருக்கி கூட்டு நடவடிக்கைப் படை அளித்த தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர்கள் விசாரிக்கப்பட்டுவருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார் என சௌதி அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று வாரங்களுக்கு முன்பு, ஜமால் கசோக்கி இஸ்தான்புல்லில் உள்ள சவுதித் துணைத் தூதரகத் துக்கு வந்து திரும்பிச் சென்றுவிட்டார் என ஆரம்பத்தில் கூறியது சவுதி.

பிறகு, அங்கே நடந்த ஒரு கைகலப்பில் அவர் இறந்துவிட்டார் என்று அந்நாடு கூறியது.

தற்போது அது திட்டமிட்ட கொலை என்றும் அந்நாடு ஒப்புக்கொண்டுள்ளது.

முன்னதாக, சவுதி பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி துருக்கியில் உள்ள சவுதி தூதரகத்தில் கொல்லப்பட்ட சம்பவத்தின்போது பதிவு செய்யப்பட்டதாக நம்பப்படும் ஓடியோப் பதிவை அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏயின் இயக்குநர் ஜினா ஹேஸ்பல் கேட்டார் என்று ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

இந்தவாரத் தொடக்கத்தில் துருக்கி சென்றிருந்த போது அந்த ஓடியோப் பதிவை கேட்பதற்கு ஜினா அனுமதிக்கப்பட்டார் என்று அந்த செய்திகள் கூறுகின்றன. தாம் கேட்ட விவரங்கள் குறித்து அவர் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பிடம் விவரிக்க உள்ளார் என்றும் தெரியவருகிறது.

அமெரிக்காவில் வாழ்ந்து வந்த ஜமால் கசோக்கி, சவுதி அரசைப் பற்றி கடுமையாக விமர்சித்து வந்தவர். துருக்கியின் இஸ்தான்புல்லில் உள்ள சவுதி துணைத் தூதரகத்துக்கு சென்ற அவர் திரும்பவே இல்லை. பிறகு அவர் கொல்லப்பட்டதாக செய்தி வெளியானது.

முரட்டு ஏஜெண்டுகளே இந்தக் கொலைக்குக் காரணம் என்று சவுதி அரேபியா முதலில் கூறியது.

இந்தச் சம்பவத்தால் சவுதி அரேபியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அக்டோபர் 2 ஆம் தேதி நடந்த கொலைக்குப் பிறகு, அந்த கொலைச் சம்பவத்தின்போது பதிவு செய்யப்பட்ட ஓடியோ பதிவு தங்களிடம் இருப்பதாக துருக்கி அதிகாரிகள் கூறினர் என பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. ஆனால், அந்த ஓடியோவில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றியோ, அது அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது என்பது பற்றியோ எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

கசோக்கி, தூதரகத்துக்குள் செல்ல முன்னர் தனது 'அப்பிள்' ரகத் தொலைபேசியை தனது காதலியிடம் கையளித்துச் சென்றார் என்றும், அவரது கைகளில் அச்சமயம் கட்டப்பட்டிருந்த கைமணிக்கூட்டிலிருந்த நவீன கருவி மூலம் அவரைச் சூழ நடக்கும் சம்பவங்கள் பற்றிய சத்தங்கள் வெளியிலிருந்த கைபேசியில் பதிவாகிக் கொண்டிருந்தன என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை ஹேஸ்பல் துருக்கி சென்றார். அவர் அந்த ஓடியோ பதிவுகளை கேட்டார் எனத் துருக்கியில் இருந்து வெளியாகும் சபா நாளிதழ் புதன்கிழமை செய்தி வெளியிட்டது.

அந்த ஓடியோ மிக உறுதியான தகவல்களைக் கொண்டிருப்பதாகவும் இந்தக் கொலைக்கு சவுதி அரேபியாவை பொறுப்பாக்கும்படி அது அமெரிக்காவை நிர்ப்பந்திக்கும் என்றும் அந்த ஓடியோவைப் பற்றி தெரிந்த ஒருவர் வொஷிங்டன் போஸ்டிடம் தெரிவித்தார்.

ஆனால், இந்த கொலை திட்டத்தை சவுதி இளவரசர் சல்மானுக்கு மிக நெருக்கமானவர்களே செயல்படுத்தினர் எனத் துருக்கி பாதுகாப்புத்துறை வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

சமீபத்தில் ரியாத்தில் நடந்த வணிக மாநாடு ஒன்றில் முகம்மது பின் சல்மான் பேசினார். 'பாலைவனத்தில் ஒரு டாவோஸ்' என்று பெயரிடப்பட்ட அந்த மாநாட்டை



கசோக்கி கொலையை ஒட்டி உலகின் முன்னணி அரசியல், வணிகத் தலைவர்கள் புறக்கணித்தனர்.

கசோக்கியின் உடல் எங்கிருக்கிறது என்று இன்னும் தெரியவில்லை. சவுதித் துணைத் தூதரகத்தின் தோட்டத்தில் உள்ள கிணறு இந்த வியத்தில் கவனம் பெற்றுள்ளது. இந்த வழக்கின் புலன் விசாரணை குறித்து முரண்பட்ட செய்திகள் வெளியாகின்றன.

அனடோலு என்ற செய்தி நிறுவனம் இந்த கிணற்றை சோதனையிட சௌதி அரசு அனுமதி மறுத்துவிட்டதாக முதலில் செய்தி வெளியிட்டது. ஆனால், அனுமதி தரப்பட்டுவிட்டதாக என்.டி.வி. செய்தி வெளியிட்டது. அதைப் போல கசோக்கியின் உடமைகள் சவுதித் தூதரகக் கார் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டன என்வும் அதை மறுத்தும் செவ்வாய்க்கிழமை முரண்பட்ட செய்திகள் வெளியாயின.

கசோக்கி முன்னரே திட்டமிட்டு கொடூரமான முறையில் கொல்லப்பட்டமையைக்

காட்டும் உறுதியான ஆதாரங்கள் துருக்கியிடம் இருப்பதாக இந்த வாரம் கூறிய துருக்கி அதிபர் ரிசெப் தாயிப் எர்துவான், சந்தேக நபர்கள் துருக்கியிலேயே விசாரிக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# காற்றிலிருந்து தூய நீர் எடுக்கும் புதிய தொழில்நுட்பம் கண்டுபிடிப்பு

## அமெ. ஜோடிக்கு ரூ. 25 கோடி பரிசு

காற்றில் இருந்து மிகக் குறைந்த செலவில் சுத்தமான தண்ணீர் எடுக்கும் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்த அமெரிக்க ஜோடிக்கு சுமார் ரூ.25கோடி(15 லட்சம் டொலர்) பரிசு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்செல்ஸ் நகரைச் சேர்ந்த டேவிட் ஹேர்ட்ஸ், இவரின் மனைவி லாரா டாஸ் ஹேர்ட்ஸ் ஆகியோரே இந்தத் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்துள் ளனர். இவர்களின் தொழில் நுட்பத்தின் மூலம் நாள்தோறும் காற்றின் மூலம் குறைந்தபட்சம் 2 ஆயிரம் லிட்டர் சுத்தமான நீரை எடுக்க முடியும். இதற்கு இந்திய மதிப்பின் படி 15ரூபாய்க்குள் (2சென்ட்கள்) மட்டுமே செலவாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள சமூக ஆர்வலர்கள், தன்னார்வலர்கள், தொழிலதிபர்கள் இணைந்து, திஎக்ஸ் பிரைஸ் எனும் போட்டி நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் சமூகத்துக்குப் பயன்படும் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டுபிடித்து அறிமுகப்படுத்துவோர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.

இந்தப் போட்டி நடத்தப்படுவதன் நோக்கம் புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டுவந்து செயல்படுத்தி, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும், பூமியின் சூழலை மேம்படுத்த வேண்டும் என்பது நோக்கமாகும்.

இந்தப் போட்டியில் ஏராள



மானோர் பங்கேற்ற நிலையில், இந்த ஜோடி கண்டுபிடித்த தொழில்நுட்பத்துக்கு முதல் பரிசு கிடைத்தது. காற்று மூலம் தண்ணீர் எடுக்கும் இவர்களின் தொழில்நுட்பம் அனைவரையும் கவர்ந்தது. செலவு குறைவாகவும், எளிதாகக்கிடைக்கும்பொருட்கள், கழிவுப்பொருட்களைக் கொண்டும் தண்ணீர் எடுக்கலாம் என்பதால் இது போட்டி நடுவர்களால் ஏற்கப்பட்டது.

இவர்களின் தொழில்நுட்பத்தின்படி, பெரிய கப்பலில் சரக்கு கொண்டு செல்லப்படும் பெரிய கன்டெய்னருக்குள் காற்றைச் செலுத்தி அந்தக் காற்றை மரக் கழிவுகள், மரத்தூள், மரக்கழிவுகள் போன்றவற்றை பயன்படுத்தி சூடுபடுத்துவதன் மூலம் காற்றில் உள்ள ஈரப்பதம் வெப்பத்தால், நீரைப்பெற முடியும்.இதன் மூலம் கிடைக்கும் தண்ணீர் சுத்தமான நீராக இருக்கும் என்று தெரிவிக்கின்றனர்.

"நாம் தண்ணீரை உருவாக்க மரத்தூள், மரக்குப்பை கிடைக்காவிட்டால், பரவாயில்லை, அதற்குப் பதிலாக தேங்காய் மட்டை, தவிடு, கச்சான் தோல், காய்ந்த புற்கள் மற்றும் இயற்கை கழிவுகள் ஆகியவற்றை எரியூட்டப் பயன்படுத்தலாம். இந்தத்தொழில்நுட்பத்தை இயற்கை பேரிடர் காலங்கள், பூகம்பம், நிலச்சரிவு, வறட்சி போன்ற சமயங்களில் பயன்படுத்தி மக்களுக்கு எளிதாகச் சுத்தமான தண்ணீர் கொடுக்க முடியும். ஆனால், எங்கள் தொழில்நுட்பத்தை இன்னும் சிறிது மேம்படுத்த வேண்டும். – இவ்வாறு டேவிட் ஹேர்ட்ஸ் தெரிவித்தார்.

# பேஸ் புக்' நிறுவனத்துக்கு 12 கோடி ரூபா அபராதம்!

## லண்டன் தகவல் ஆணையர் அலுவலகம் விதிப்பு

லண்டன், ஒக்.27

பேஸ்புக்' நிறுவனத்துக்கு இங்கிலாந்து நாட்டின் ஐ.சி.ஓ. என்னும் தகவல் ஆணையர் அலுவலகம் 5 லட்சம் பவுண்டு (சுமார் 12 கோடி ரூபா)அபராதம் விதித்துள்ளது.




பிரபல சமூக வலைத்தளமான 'பேஸ்புக்'கில் இருந்து, அதன் உபயோகிப்பாளர்களின் அந்தரங் கதகவல்கள், கேம்பிரிட்ஜ் அனாலிட்டிகா என்ற நிறுவனத்தால் திருடப்பட்டு உள்ளன.

அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் நடந்த தேர்தல்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த திருட்டினால், 'பேஸ்புக்' சமூக வலைத்தள நிறுவனர் மார்க் ஜுக்கர்பெர்க் நெருக்கடிகளை சந்தித்து வருகிறார்.

தகவல் திருட்டு விவகாரத்தில் 'பேஸ்புக்' நிறுவனத்துக்கு இங்கிலாந்து நாட்டின் தகவல் கண்காணிப்பு அமைப்பான ஐ.சி.ஓ. என்னும் தகவல் ஆணையர் அலுவலகம் 5 லட்சம் பவுண்டு அபராதத்தை அதிரடியாக விதித்துள்ளது.

இங்கிலாந்து நாட்டில் நடைமுறையில் இருந்து வருகிற பழைய தகவல் பாதுகாப்பு விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகபட்ச அபராதம், 'பேஸ்புக்' நிறுவனத்துக்கு விதிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில் அரசியல் நோக்கங்களுக்காக 'பேஸ்புக்' உபயோகிப்பாளர்களின் தகவல்கள் எப்படி பயன்படுத்தப்பட்டன என்பதைதகவல் கண்காணிப்பு அமைப்பான ஐ.சி.ஓ. இன்னும் ஆராய்ந்து வருவதாகத் தகவல்கள் கூறுகின்றன.

# ஊடகவியலாலர் ஜமால் கொலை; ஆதாரத்தை வெளியிட்டது துருக்கி

ஜமாலை சவுதிதான் கொலை செய்திருக்கிறது என்று துருக்கி உறுதியாகக் கூறியதுடன், இதற்கான வீடியோ மற்றும் ஆடியோ ஆதாரத்தை துருக்கி வெளியிட்டது.

துருக்கியில் உள்ள சவுதி அரேபியா தூதரகத்தின் உள்ளே ஜமாலின் விரல்கள் துண்டிக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டு, பின்னர் அவரது தலை துண்டிக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டதாகவும் துருக்கி குற்றம் சாட்டியது.

ஜமால் கொல்லப்பட்டதை தொடர்ந்து மறுத்து வந்த சவுதி, துருக்கி வெளியிட்ட தொடர் ஆதாரங்களை தொடர்ந்து ஜமால் கொல்லப்பட்டதை சவுதி ஒப்புக்கொண்டது.



# வெண்கலப் பதக்கம் வென்ற வீராங்கனைக்குப் புதிய வீடு

சிலாபம் பிரதேசத்தில் வசிக்கும் பாரமி வசந்தி மரிஸ்டெல்லாவுக்கு புதிதாக பூரணத்துவம் பெற்ற வீடு ஒன்றை அமைப்பதற்காக நேற்று முதற்கட்டப் பணிகளுக்கான காசோலை நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த சிசிரகுமார அபேசேகரவால் கையளிக்கப்பட்டது.

கடந்த நாட்களில் இளையோர் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டு வெண்கலப் பதக்கம் வென்ற குறித்த யுவதியைக் கௌரவிக்கும் வகையில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பாரமியின் வீடு புதிதாகக் கட்டத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு ஆரம்பகட்டப் பணிகளுக்கான காசோலையே இவ்வாறு வழங்கப்பட்டது.

# பங்களாதேஷ் அணியில் மாற்றம்



சிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் விளையாடிய வீரர்களில் ஐவர் மாற்றப்பட்டுள்ளனர்.

சிம்பாப்வே அணிக்கெதிராக மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பங்களாதேஷ் விளையாடி வருகிறது.

இந்த தொடர் முடிந்த பின்னர் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இந்த தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கிப் அல் ஹசன் மற்றும் தமிம் இக்பால் ஆகியோர் காயத்தால் இடம்பெறவில்லை. புதுமுக வேகப்பந்து வீச்சாளர் கலித் அஹ்மது அணியில் இடம்பிடித்துள்ளார். இவருடன் முகமது மிதுன், நஸ்முல் இஸ்லாம், சகலதுறை வீரர் அரிபுல் ஹக்யூ ஆகியோரும் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

மேலும் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் இடம்பெறாத வேகப்பந்து வீச்சாளர் முஸ்டாபிஜுர் ரஹ்மானும் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

பங்களாதேஷ் அணியில் இடம்பிடித்துள்ள வீரர்கள் விவரம் –

1. மெஹ்முதுல்லா (தலைவர்), 2. இம்ருல் கெய்ஸ், 3. லிட்டோன் தாஸ், 4. மொமினுல் ஹக்யூ, 5. நஸ்முல்ஹொஸைன், 6. முஷ்டாபிஜுர் ரஹ்மான், 7. முஷ்பிகுர் ரஹிம், 8. அரிபுல் ஹக்யூ. 9. மெஹிது ஹசன், 10. தைஜுல் இஸ்லாம், 11. அபு ஜாயெத், 12. பியூல் இஸ்லாம், 13. முகமது மிதுன், 14. கலித் அஹமது, 15. நஸ்முல் இஸ்லாம். இந்த தொடரின் முதல் டெஸ்ட் போட்டி நவம்பர் 3 ஆம் திகதி ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்து வீரர்களுக்கு பயிற்சியாளர் எச்சரிக்கை



சரியாக விளையாடாத வீரர்களுக்கு, உலகக் கிண்ணத்துக்கான இங்கிலாந்து அணியில் இடம் இல்லை எனப் பயிற்சியாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இங்கிலாந்து அணி 3-1 என்ற கணக்கில் வென்றது. எனினும், கடைசி போட்டியில் இலங்கை அணியிடம் படுதோல்வியைச் சந்தித்தது.

இலங்கை அணி நிர்ணயித்த 367 ஓட்டங்கள் இலக்கை நோக்கி ஆடிய இங்கிலாந்து அணிக்கு, மழை பெய்ததால் 26.1 ஓவரில் 352 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று மாற்றியமைக்கப்பட்டது.

எனினும், இங்கிலாந்து அணியால் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 132 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் இலங்கை அணி 219 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இங்கிலாந்தில் அடுத்த ஆண்டு மே 30ஆம் திகதி, உலகக் கிண்ண ஒருநாள் தொடர் நடைபெற உள்ளது. இன்னும் 7 மாதங்களே உள்ள நிலையில் அனைத்து அணிகளும் தங்களைத் தயார்ப்படுத்தி வருகின்றன.

இந்நிலையில், இலங்கைக்கு எதிரான தொடரில் இங்கிலாந்து வீரர்களின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை என்று, அந்நாட்டு கிரிக்கெட் சபை யோசனையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இங்கிலாந்து அணியின் தலைமை பயிற்சியாளர் டிரெவர் பெய்லிஸ் கூறுகையில், 'இங்கிலாந்து வீரர்கள் சிறப்பாக விளையாடாவிட்டால், உலகக் கிண்ண அணியில் இருக்கமாட்டார்கள்' என எச்சரித்துள்ளார்.

# இலங்கைத் தொடரில் நடந்த மது விற்பனை




இலங்கை – இங்கிலாந்து தொடரை நேரில் காண வந்த இங்கிலாந்து ரசிகர்களுக்கு முறையான உரிமம் இல்லாமல் மது வழங்கிய தனியார் உணவு நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இலங்கை – இங்கிலாந்து அணிகள் மோதும் கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்று வருகிறது. இரு அணிகளும் மோதிய ஐந்தாவது ஒருநாள் போட்டி கொழும்பில் நடந்தது.

இப்போட்டியை நேரில் பார்த்த இங்கிலாந்து ரசிகர்களுக்கு கிளாசிக் டெஸ்ரினேசன் என்ற தனியார் நிறுவனம் உணவுகளுடன் சேர்த்து மது பானங்களை வழங்கியது.

இதையடுத்து அதிகாரிகள் மதுப் போத்தல்களை பறிமுதல் செய்தார்கள்.

மதுவை முறையான அனுமதி மற்றும் உரிமம் பெறாமல் மைதானத்தில் விற்பனை செய்த இந்த நிறுவனத்தின் ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிக்கையை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே கிரிக்கெட் போட்டியை காண உள்ளூர் ரசிகர்களை விட இங்கிலாந்து ரசிகர்களிடம் கூடுதல் கட்டணம் வசூலிப்பதாக புகார் எழுந்தது.

இதையடுத்து எல்லோருக்கும் ஒரே கட்டணம் தான் வசூலிக்கப்படுகிறது என இலங்கை கிரிக்கெட் சபை விளக்கமளித்தது குறிப்பிடத்தக்கது.

# ஓய்வு பெற்றார் பிராவோ




மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரர் பிராவோ சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

2004 இல் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமான பிராவோ இதுவரை 40 டெஸ்ட், 164 ஒருநாள் மற்றும் 66 டி20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

செப்ரெம்பர் 2016 இக்கு பிறகு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்காத பிராவோ தற்போது ஓய்வு முடிவை அறிவித்துள்ளார்.

ஆனாலும், ஐ.பி.எல். மற்றும் உள்ளூர் 20/20 போட்டிகளில் தொடர்ந்து விளையாடவுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சங்கத்துடன் ஏற்பட்ட மோதலால் அவர் அதிகமான சர்வதேசப் போட்டிகளில் விளையாட முடியாமல் போனது குறிப்பிடத்தக்கது.

## சிறுபான்மை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

முன்னாள் அமைச்சர்கள் மனோ கணேசன் தலைமையிலானதமிழ்முற்போக்குக்கூட்டணி, ரவூக் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் டக்ளஸ் தேவனாந்தா, ஆறுமுகம் தொண்டமான் ஆகியோருக்கும் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மஹிந்தவை பிரதமராகக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு நாடாளுமன்றில் 96 ஆசனங்களை மட்டும் கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி105ஆசனங்களைக்கொண்டுள்ளது. இந்த நிலையில் சிறுபான்மைக் கட்சிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கித் தம் பக்கம் இழுக்க ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு முயற்சித்துள்ளது. (ஐ)

## உரிய காலம்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஊடகங்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கேள்வி – பதில் அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கேள்வி: தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சியை இரண்டு தினங்களுக்கு முன்னர் அறிவித்துள்ளீர்கள். இந்த நிலையில் எந்த எந்தக் கட்சிகளுடன் கூட்டணி அமைக்கிறீர்கள் என்று கூற முடியுமா?

பதில்: எந்தக் கட்சியும் என்னுடன் இதுவரை கூட்டணி அமைக்கவில்லை. கொள்கை அடிப்படையில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்களுக்கான அரசியல் செயற்திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுக்க உத்தேசித்துள்ளேன். ஆரம்பித்துள்ள தமிழ் மக்கள் கூட்டணியை தமிழ் மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதும் அவர்களை உள்வாங்குவதுமே எனது முதற்கட்ட நடவடிக்கை. பல பொது அமைப்புக்களும் தனி நபர்களும் எனது கட்சியில் சேருவது குறித்து அல்லது இணைந்து செயற்படுவது குறித்து என்னுடன் சந்திப்பில் ஈடுபட்டுவருகிறார்கள். உரிய காலம் வரும்போது கூட்டு அணி ஒன்றை உருவாக்கி செயற்படும் நடவடிக்கைகளை எடுப்பேன்.

கேள்வி: ஈ.பி.ஆர்.எல்.எவ் வுடன் கூட்டணி அமைத்தால் உங்களுடன் இணைந்து செயற்படத்தயார் இல்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அறிவித்திருக்கின்றமை குறித்து என்ன சொல்கிறீர்கள்?

பதில்: அது அவர்களின் அறிவிப்பு. நான் முன்னர் கூறியபடி எந்தக் கட்சிகளுடனும் கூட்டுச்சேரவில்லை. கொள்கை அடிப்படையில் தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இதற்கான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்வேன் – என்றுள்ளது. (ஐ)

## மைத்திரிக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கையைக் கொண்டுள்ளேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கியுள்ளதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே ரணில் விக்கிரமசிங்க இந்தக் கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார். (ஐ)

## கவிழ்ந்தது...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதி மைத்திரிபாலவின் இந்த அதிரடி நடவடிக்கையால் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கவினர் கடும் அதிர்ச்சி அடைந்தனர். கொழும்பு அரசியலிலும் பெரும் பரபரப்பான நிலை ஏற்பட்டது.

முன்னதாக நேற்று மாலை கூட்டு அரசில் இருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விலகுகின்றது என அதன் பொதுச் செயலர் மஹிந்த அமரவீர சபாநாயகர் கரு ஜயசூரியவுக்குக் கடித மூலம் அறிவித்திருந்தார்.

இந்த அறிவித்தல் விடுக்கப்பட முன்னர் கூட்டு அரசில் அங்கம் வகிக்கும் சு.கவின் 23 எம்.பிக்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி செயலகத்தில் அவசர அவசரமாகச் சந்தித்தார். இதன்போது, ரணிலைப் பிரதமராக இனி வைத்திருக்க முடியாது என்றும் புதியவர் ஒருவரைப் பிரதமராக நியமிக்கவுள்ளார் எனவும் அவர் சு.க. எம்.பிக்களிடம் கூறியுள்ளார். இதன் பின்னர் கூட்டு அரசில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விலகிக் கொள்வது என்று அங்கு முடிவெடுக்கப்பட்டது. ஜனாதிபதியின் இந்த முடிவுக்கு சு.கவில் இருந்த சில அமைச்சர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். ஆயினும் கூட்டு அரசில் இருந்து வெளியேறுவது என்ற முடிவில் மைத்திரிபால உறுதியாக இருந்தார்.

இதனையடுத்து கூட்டு அரசில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விலகுகின்றது என அறிவிக்கும் கடிதம் அங்கு கொண்டுவரப்பட்டு அதில் ஐ.ம.சு.கூ. பொதுச் செயலர் மஹிந்த அமரவீரவிடம் வலுக்கட்டாயமாகக் கையெழுத்துப் பெறப்பட்டது. அந்தக் கடிதம் உடனடியாகச் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுச் சொற்ப நேரத்தில் பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவியேற்றார்.

இதற்கான ஏற்பாடுகள் எல்லாம் தகவல்கள் வெளியே கசியாதவாறு ஜனாதிபதி செயலகத்தால் கனகச்சிதமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. சு.கவில் உள்ள அமைச்சர்களுக்குக் கூட இது தொடர்பான தகவல்கள் கசிய விடப்படவில்லை. அந்தளவுக்கு ஏற்பாடுகள் மிக இரகசியமாக இருந்தன.

கடிதம் சபாநாயகரிடம் போய்ச் சேர்ந்து சில நிமிடங்களில் ஜனாதிபதி செயலகத்தை வந்தடைந்தார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அவருடன் கூட்டு எதிரணியின் முக்கிய உறுப்பினர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். ஜனாதிபதி செயலகத்தில் மஹிந்த பிரதமராகப் பதவியேற்பதற்கான ஏற்பாடுகள் அங்கு ஏற்கனவே தயாராக இருந்தன. இதனால் வந்து அங்கு வந்து சேர்ந்த உடனேயே ஜனாதிபதி மைத்திரிபால முன்னிலையில் பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்தார் மஹிந்த.

அவரது பதவியேற்பு வைபவம் முடியும்வரை தகவல் வெளியே கசியவில்லை.

இதன் பின்னரே ஐ.தே. கவினருக்கும் விடயம் தெரிய வந்தது. அதிர்ந்துபோனார்கள் அவர்கள்.

எனினும், இந்தப் பதவியேற்பு, சட்டத்துக்கும் அரசமைப்புக்கும் உட்பட்டதா என்பது தொடர்பில், தொடர்ந்தும் சந்தேகங்கள் நிலவுகின்றன.

புதிய பிரதமராக பதவியேற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு கங்காராம விஹாரையில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார். அங்கிருந்து விஜயராம மாவத்தையில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்றார். (ஐ)

## மஹிந்த நியமனம்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்றும், ரணில் விக்கிரமசிங்கவே நாட்டின் பிரதமராகப் பதவி வகிக்கிறார் என்றும் அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன பி.பி.ஸியிடம் தெரிவித்தார்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவை கலைக்கப்பட்டுவிட்டதாகவும், புதிய பிரதமராக மஹிந்த நியமிக்கப்பட்டுள்ளார் என்றும் ஜனாதிபதி செயலகம் கூறியுள்ளது.

இதனால், இந்த ஆட்சிமாற்றம் அரசமைப்பு ரீதியாக செல்லுபடியாகுமா – யார் இப்போது ஆட்சியில் இருப்பது என்ற குழப்பமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக இருக்கிறார் என்றும், அரசமைப்பு ரீதியாக அவரை அகற்ற முடியாது என்றும், ஐ.தே.கவைச் சேர்ந்த அமைச்சர் அஜித் பெரேரா கூறியுள்ளார்.

இந்த நிலையில், இலங்கையில் ஒரு பாரிய அரசியல் குழப்ப நிலையும், நிச்சயமற்ற சூழலும் தோன்றியிருக்கிறது.

அதேவேளை, மஹிந்த பிரதமராகப் பதவியேற்றுள்ளதை அடுத்து தென்பகுதியில் பல இடங்களில் பட்டாசுகள் கொளுத்திக் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிடையே, இலங்கையில் அரசியல் மறுசீரமைப்பு மற்றும் நல்லிணக்கத்துக்கு 2015இல் கொடுக்கப்பட்ட மக்கள் ஆணைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாரிய துரோகம் இழைத்துவிட்டார் என்று செயற்பாட்டாளரான, நாலக குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ஐ)

## சபாநாயகரின்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமை தொடர்பாகக் கவனம் செலுத்தியுள்ளேன். இது தொடர்பான சட்ட ஆலோசனைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையையும் எடுத்துள்ளேன்.

அத்துடன் இது தொடர்பான விரிவான விளக்கத்தை நாளை (இன்று) அறிவிப்பேன் என சபாநாயகர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## முக்கிய...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, அரச ஊடக நிறுவனங்களைச் சுற்றி இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுப் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் (ஐ.ரி.என்) பணியாளர்கள் சிலர், ஒரு குழுவினரால் தாக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஐ.ரி.என். செய்தி அறைக்குள் நுழைந்த ஒரு குழுவினர் அங்கிருந்த ஊடகப் பணியாளர்களைத் தாக்கியுள்ளனர்.

இதையடுத்தே, அரச ஊடக நிறுவனங்களுக்கு இராணுவ பாதுகாப்பு அளிக்க ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# மலையக இளைஞர் எழுச்சியை வரவேற்கின்றது கூட்டு எதிரணி

நியாயமான போராட்டங்களை முன்னிலைப்படுத்தி எவ்வித மான அரசியல் தலையீடுகள் மற்றும் ஆதரவு இல்லாமல் போராட்டத்தை முன்னெடுத்த மலையக இளைஞர்களின் போராட்டம் வரவேற்கத்தக்கது எனக் கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

தங்களின் பிரதிநிதிகள் தமக்கு தேவையில்லை என்பதை அவர்கள் பகிரங்கப்படுத்திவிட்டனர் என்றும் அது கூறியுள்ளது.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான காஞ்சன விஜயசேகர , இந்திக அனுருத்த ஹேரத் , பி.பிசானக ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடனே மக்கள் விடுதலை முன்னணியினர் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த செப்ரெம்பர் மாதம் பொதுஜனபெரமுனவின் போராட்டத்தை முடக்க அரசு பல முயற்சிகளை மேற்கொண்டது. அன்று செயற்படுத்திய முறைமைகள் எவற்றையும் ஜே.வி.பியின் விடயத்தில் செயற்படுத்தவில்லை.

மலையக இளைஞர்கள் பலருக்குப் பாடம் புகட்டும் விதமாக மேற்கொண்ட போராட்டத்தில் பலரது முகத்திரைகள் கிழிக்கப்பட்டுள்ளன –என்றனர். (ஐ)

## ஜனநாயக...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கூட்டு அரசிலிருந்து விலகுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நேற்றிரவு திடீரென அறிவித்தது. சற்று நேரத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பிரதமராகப் பதவியேற்றார்.

இந்த நியமனம் தொடர்பில் தனது கீச்சகத்தில் மங்கள சமரவீர மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார். (ஐ)

## மஹிந்த பக்கம்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சகோதரரான இவர், ஊடகங்களிடம் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பலர் மஹிந்தவுக்கு ஆதரவளிக்கவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டு அரசின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த வசந்த சேனநாயக்கவும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளதுடன், அவருடன் இணைந்து கொள்ளப் போவதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கட்சி தாவப்போவதாக வெளியாகியுள்ள தகவல்களில் உண்மையில்லை என்று பிரதி அமைச்சர் அஜித் பெரேரா மறுத்துள்ளார்.

முன்னாள் நிதி அமைச்சர் ரவிகருணாநாயக்கவும் மஹிந்த–மைத்திரி கூட்டு அரசில் இணையவுள்ளார் என ஊகங்கள் பரவியுள்ளன. எனினும், அந்தச் செய்திகளில் உண்மையில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் பலரும் கூறினர். (ஐ)

## ரனிலுக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதமர் பதவியில் இருந்து உடனடியாக நீக்கியுள்ளதாகவும், புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்றிரவு அறிவித்தது. (ஐ)

## நானேதான்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்தத் திருட்டுத்தனத்துக்குச் சட்ட வரம்புகளுக்கமைய நான் முடிவு கட்டுவேன்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்றிரவு தெரிவித்தார்.

அதில், நாட்டின் பிரதமராக தான் இன்னமும் பதவியில் இருப்பதாகவும், நாடாளுமன்றத்தில் விரைவில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பேன் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## புதிய...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார்.

புதிய அமைச்சரவை தொடர்பான கலந்துரையாடலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் ஈடுபட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் பிரதமர் மஹிந்தவுக்கு இடையில் நேற்றிரவு ஜனாதிபதி செயலகத்தில் முக்கிய பேச்சு ஒன்று இடம்பெற்றது என்றும், எதிர்கால அரசியல் நிலை குறித்து இருவரும் பேச்சு நடத்தினர் எனவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் கூறின.

## ரணில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இல்லமான அலரிமாளிகையில் நேற்றிரவு கூடி அவசர ஆலோசனை நடத்தினர்.

அரசமைப்புக்கு முரணாக பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டு மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. இந்த ஆட்சிக்கவிழ்ப்பை நேற்றிரவு ஜனாதிபதி அரங்கேற்றினார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் அடிப்படையில் பிரதமரை அமைச்சரவையின் முழுமையான எதிர்ப்பு அல்லது நாடாளுமன்றின் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலமே நீக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கியதுடன், நடைமுறையிலிருந்த அமைச்சரவையையும் கலைத்தார்.

இந்த நிலையில் ஜனநாயகத்துக்கு முரணாகவும் அரசமைப்பை மீறியும் ஜனாதிபதி எடுத்த இந்த நடவடிக்கை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியினர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் கூடி ஆராய்ந்தனர். (ஐ)

# வடக்கு – கிழக்கில் ஆளுநர் ஆட்சி தொடர அனுமதிக்கவேகூடாது!

## களமிறங்க விக்கி தயாரா எனக் கேட்கிறார் நஸீர்



மட்டக்களப்பு, ஒக். 27

கிழக்கு மாகாண சபை இப்போது ஆளுநரின் அதிகாரத்தில் சிக்கி சின்னாபின்னாமாகிக் கொண்டிருக்கின்றது. நாம் மாகாண சபையின் ஆட்சிப்பீடத்தில் இருந்தபோது பல முதலீட்டுத் திட்டங்களை அறிமுகம் செய்து பல்வேறு தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தினோம். ஆனால், ஆளுநர் ஆட்சிக்குள் கிழக்கு வந்த பின்னர் இதுவரை அரசின் மூலமாக அங்கு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் என்ன என்பதைப் பார்ப்போமானால் எதுவும் இல்லை என்பதே பதிலாகும் தற்போது அங்கு எல்லாமே வியாபார மயமாகிக் கொண்டிருக்கின்றது. இந்நிலை வடக்கு மாகாண சபைக்கும் ஏற்படக்கூடாது. எனவே, வடக்கின் முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் எம்முடன் இணைந்து மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் செயல்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவேண்டும். இதற்கு அவர்கள் தயாரா?

– இப்படியொரு அழைப்பை விடுத்துள்ளார் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நஸீர் அஹமட்.

இந்த விடயம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: –

2015ஆம்ஆண்டு ஜனாதிபதி முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேர்தல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாகவே கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின்போது கலப்புத் தேர்தல் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்போது பழைய தேர்தல் முறைமை காரணமாக அதிக பணவிரயம், தகுதியற்றவர்கள் நியமனம், பொறுப்புக்கூறல் அற்ற பிரதிநிதித்துவம், பெண்களுக்குரிய இடஒதுக்கீடு இல்லாமை போன்ற பல விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

எனினும், கலப்பு முறையில் தேர்தல் நடைபெற்று முடிந்த பின்னர் ஏற்பட்டிருக்கும் நிலையைப் பார்க்கும்போது பணவிரயம் முன்னரை விட 5 மடங்கு அதிகரித்திருக்கின்றது. தகுதியில்லாதவர்கள் நியமனங்கள் அதிகளவில் ஏற்பட்டுள்ளன. பெண்களுக்கு 25 சதவீத ஒதுக்கீடு எனக் குரல் எழுப்பியபோதும். உண்மையான அரசியல் ஆர்வம் கொண்ட பெண்களின் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. கட்சிகள் தமக்கு வேண்டிய பெண்களை நியமிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஒவ்வொரு சபைகளிலும் இருப்பதற்குக் கூட இடமில்லாத வகையில் சபை அங்கத்தவர்களின் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

இவற்றை எல்லாம் பார்க்கும் போது இம்முறைமை படுதோல்வி கண்டுள்ளது. எனவே, இதனை அறிமுகம் செய்த ஜனாதிபதிதான் இதற்குப் பொறுப்புக் கூறவேண்டும். தொடர்ந்தும் கலப்புத் தேர்தல் முறைமையை மாகாண சபைத் தேர்தலிலும் திணிக்கவே அவர் விரும்புகின்றார். இதனை சிறுபான்மையாராகிய நாம் ஏற்றுக் கொள்ள முடியாது.

கிழக்கில் தற்போது நடைபெறும் ஆளுநர் ஆட்சி முறைமையைப் பார்க்கும்போது பெரும் அச்சம் ஏற்படுகின்றது. அங்கு அரங்கேறிக் கொண்டிருக்கும் நிலைமைகள் குறித்து எதிர்காலத்தில் நாம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை நிச்சயம் எடுப்போம். இந்நிலை, வடக்கிலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே எமது ஆதங்கம் ஆகும்.

எனவே, வடக்கின் முன்னாள் மாகாண சபை பிரதிநிதிகளும் கிழக்கின் முன்னாள் பிரதிநிதிகளும் இணைந்து மாகாண சபைத் தேர்தலை விரைவில் வடக்கு, கிழக்கில் நடத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டியது அவசியமானது – என்றுள்ளது. (ஐ)

# அரசியல் மாற்றம் நீடிப்பது எம் கைகளில்தான் உள்ளது

## சென்னையில் ஹக்கீம் தெரிவிப்பு

சென்னை, ஒக். 27

தற்போதைய அரசியல் மாற்றம் நீடிக்கவேண்டுமாயின் அது எமது கைகளிலேயே உள்ளது என்று சிறிலங்கா முஸ்லியம் காங்கிரஸின் தலைவர் ரவூக் ஹக்கீம் சென்னையில் தெரிவித்துள்ளார்.

பிரதமராக மஹிந்த பதவியேற்றுள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீமிடம் தமிழக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதில ளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பாக இன்று பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடி எதிர்கால நடவடிக்கை தொடர்பில் தீர்மானிக்கவுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ஐ)

# மஹிந்த, கோட்டாவுடன் பூஜித் அவசர ஆலோசனை

கொழும்பு, ஒக். 27

பிரதமராக பதவியேற்றுள்ள மஹிந்த ராஜபக்ஷவை பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் விசேட அதிரடிப்படையின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் லத்தீப் உட்பட பல பொலிஸ் உயர் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

அண்மைக்காலமாகப் பொலிஸ் மா அதிபரின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்துவந்த மஹிந்த, இன்று நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் அவருடன் விரிவாகக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு உத்தரவிட்டுள்ள நிலையில், புதிய பிரதமர் பொலிஸ்மா அதிபரை சந்தித்துள்ளார். (ஐ)

# சம்பந்தனின் பதவியும் பறிபோகும்



கூட்டரசில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விலகியதை அடுத்து புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றார்.

இதனால் கூட்டரசில் இருந்த ஐ.தே.க. எதிர்க்கட்சியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. அப்படி ஏற்படுமானால் தற்போது எதிர்க்கட்சித் தலைவராக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அந்தப் பதவியை இழப்பார் எனத் தெரியவருகிறது. (ஐ)

# கூட்டமைப்பின் நிலைப்பாடு விரைவில் அறிவிக்கப்படும்

கொழும்பு, ஒக். 28

அரசியலில் நடக்கும் மாற்றங்கள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். கூட்டமைப்பின் நிலைப்பாடு விரைவில் அறிவிக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன்.

நல்லாட்சியைக் கவிழ்த்து நேற்றுப் பிரதமராகப் பதவியேற்றார் மஹிந்த ராஜபக்ஷ.

இது குறித்து சம்பந்தனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் மாற்றங்கள் குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். விரைவில் கூடி ஆராய்ந்து எங்கள் நிலைப்பாட்டை மக்களுக்கு அறிவிப்போம்–என்றார் (ஐ)

# உயர்நீதிமன்ற நீதியரசராக துரைராஜா பதவி உயர்வு



மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சிதம்பரப்பிள்ளை துரைராஜா, உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவி உயர்வு பெறுகிறார். இதன்மூலம் மலையகத் தமிழர் ஒருவர் உயர்நீதிமன்ற நீதியரசராகப் பதவி உயர்வு பெறும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

நீதியரசர் எஸ்.துரைராஜாவுடன் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஈ.ஏ.ஜி.ஆர். அமரசேகரவும் உயர் நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்மொழியப்பட்ட நான்கு நீதியரசர்களின் பெயர்களிலிருந்து இவர்கள் இருவரையும் உயர் நீதிமன்ற நீதியரசராக நியமிக்க அரசமைப்புச் சபை நேற்றுமுன் தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

பிரதம நீதியரசர் பிரியசாத் டெப், கடந்த 12ஆம் திகதி நீதிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். புதிய பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் நளின் ஜெயலத் பெரேரா நியமிப்பட்டார்.

இந்த மாற்றங்களையடுத்து உயர்நீதிமன்ற நீதியரசர் குழாமில் வெற்றிடம் ஏற்பட்டது. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் தீபாலி விஜயசுந்தர, ஈ.ஏ.ஜி.ஆர்.அமரசேகர, எஸ்.துரைராஜா மற்றும் குமுதினி விக்கிரமசிங்க ஆகியோரின் பெயர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அரசமைப்புச் சபைக்கு முன்மொழிந்தார்.

இந்த நிலையில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் அரசமைப்புச் சபை நேற்றுமுன் தினம் கூடியது. பிரதமர் ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், அமைச்சர்கள் தலதா அத்துக்கோரள, மஹிந்த சமரசிங்க, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிமல் ரட்ணாயக்க ஆகியோரும் சிவில் சமூகப் பிரதிநிதிகளான கலாநிதி ஜயந்த தனபால, அகமட் ஜாவிட் யூசுப் மற்றும் சட்டத்துறை விரிவுரையாளர் நாகநாதன் செல்வக்குமரன் ஆகியோரும் பங்கேற்றனர்.

இதன்போது நீதியரசர்கள் எஸ்.துரைராஜா, அமரசேகர இருவரையும் உயர் நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்க அரசமைப்புச் சபை ஒப்புதல் வழங்கியது.

அத்துடன், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோவை நியமிக்கவும் அரசமைப்புச் சபை ஒப்புதல் வழங்கியது. மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஏ.ஏ.ஹயாந் தொடுவ, அருண ரனசிங்க, குசல சரோஜினி வீரவர்த்தன ஆகியோரின் பெயர்களையும் ஜனாதிபதி பரிந்துரைத்திருந்தார்.

நீதியரசர் எஸ்.துரைராஜா யார்?

புஸல்லாவ சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பயின்ற துரைராஜா, கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் இடைநிலைக் கல்வியைப் பயின்றார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டமாணிப் பட்டத்தைப் பெற்று சட்டத்தரணியாக 1988ஆம் ஆண்டு பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

லண்டன் பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட சிதம்பரம்பிள்ளை துரைராஜா, கொழும்புப் பல்கலைக்கழகத்தில் வர்த்தக தொழில்நுட்ப டிப்ளோமா பட்டத்தையும், மோல்டாவில் சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை தொடர்பான சர்வதேசப் டிப்ளோமாவையும் பெற்றுக்கொண்டார்.

பிஜி குடியரசில் பரிஸ்டராகவும் சொலிஸிட்டராகவும் பணியாற்றிய இவர், 1989ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்டார். 2000 ஆம் ஆண்டு வரை அரச சட்டத்தரணியாகவும், 2000ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டு வரை மூத்த அரச சட்டத்தரணியாகவும் செயற்பட்டார்.

2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுவரை பிரதி சொலிஸிட்டர் ஜெனரலாகவும், 2014ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரை மேலதிக சொலிஸிட்டர் ஜெனரலாகவும் செயற்பட்டு வந்தார். அத்துடன், 2016ஆம் ஆண்டு ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார்.

அத்துடன், சட்டக்கல்லூரி, கொழும்பு சட்ட பீடம், திறந்த பல்கலைக்கழகம், பொலிஸ் பயிற்சிக் கல்லரி, மதுவரித் திணைக்களம் ஆகியவற்றில் சட்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றினார்.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக சிதம்பரப்பிள்ளை துரைராஜா, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டார்

இதன்மூலம் முதலாவது மலையகத் தமிழர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவி வகித்த அவர் இப்போது உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவி உயர்வு பெறுகிறார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.